அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்

# சர்வதேச பெண்கள் தினவிழா

# சிறப்பு மலர்

**1999**

## INTERNATIONAL WOMENS DAY

## AMPARA DISTRICT WOMENS DEVELOPMENT FOUNDATION



மகளிர் தின ஊர்வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.ஸி.இஸ்மா லெப்பை
அதிபரின் அன்பளிப்பு.

23/8/99

A.C.ISMALEBBAI
Principal
Km/muslim M.M.V.
National school
sammanthurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999ம் ஆண்டு

சர்வதேச மகளிர்தின விழா

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு

# சிறப்பு மலர்

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

வெளியீடு

அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்

தலைமைச் செயலகம்
அக்கரைப்பற்று

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

*Contact : Mrs. Indrani Mahalingam*
*T. Phone : 067-78357*
*Fax : 067-78358*
*Address : R. K. M. Road,*
*Akkaraipattu.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCESSION NO:- 13935
CLASS NO :- 050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கும்,

மகளிர் விழாவை நடாத்தவும்,

போட்டிகளில் வெற்றி

பெற்றோருக்கான பரிசில்களுக்கும்,

கௌரவிக்கப்படும்

பெண்களுக்கான பரிசில்களுக்கும்

உதவி வழங்கிய

றோயல் நெதர்லாந்து தூதரகத்தினர்க்கு

எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியின் வாழ்த்துச்செய்தி



அம்பாரை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் தொலை நோக்குச் சிந்தனை யோடு ஓர் இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அந்த இலக்கை நோக்கிச் செல்லும் வேளையில் மனித உறவையும் அன்பையும், பண்பையும் கொண்டு அடித்தளம் அமைத்தல் வேண்டும். அந்த அடிப்படை நோக்கத்தை மனதில் கொண்டு இவ்வாண்டு ஒன்று கூடி நமது பேச்சு, செயல் அனைத்திலும் அதை பிரதிபலிக்க செய்வதற்கான எழுச்சியை ஏற்படுத்தும் என நான் நினைக்கின்றேன்.

ஒன்றிணைந்த பல பெண் உறுப்பினர்கள் தங்களுடைய பொது வான சமூக, பொருளாதார பிரச்சனைகளைப்போக்கி தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள ஒன்றுபட்டு அவர்களிடையே பிற நல மனப்பான்மை, சகோதர உணர்வு, ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பு, ஒருவர்க்கொருவர் உதவி செய்தல், ஒருவரின் வளத்தை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளுதல், சமாதானம் போன்ற நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டியவற்றை தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் சமுதாய உறவே பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் ஆகும்.

சாதாரண மக்களும் (பெண்களும்) அசாத்தியமான காரியங் களைச் செய்ய முடியும் என செய்து காட்டி உள்ளார்கள் எமது உறுப்பினர்கள். எனவே இந்நாளில் தொடர்ந்தும் நமது பணியினை பெருமையோடு தொடர ஒன்று பட்டு குரல் கொடுப்போம்: செயல்படுவோம் வாரீர்

திருமதி. இந்திராணி மகாலிங்கம்.
தலைவி,
பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



அம்பாரை மாவட்டத்தில் யுத்த நெருக்கடிகளால் பெண்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமுகமாக 1992ம் ஆண்டு "பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்" என்ற அமைப்பை உருவாக்கினேன். அது ஆலையடிவேம்பு பிரிவில் மிகவும் சிறப்பாகப் பெண் தலைமைத்துவத்தில் சுயமாகச் செயற்பட்டு வருகின்றது.

பின்னர் மாவட்ட மட்டத்தில் "அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பை" 1995ல் ஸ்தாபித்த போதும் மாவட்டத்தில் பெண் அபிவிருத்தியில் குறைபாடு இருப்பதனையும், முஸ்லிம் சமூகத்திற்கும் எம்பணிகளை விரிவுபடுத்த வேண்டுமென்பதையும் கருத்திற் கொண்டு "பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்" என்ற அமைப்பை நிறுவி அதன் தற்போதைய தலைவி திருமதி ம. இந்திராணி அவர்களைத் தலைமைப் பொறுப்பேற்குமாறு கோரினேன்.

இன்று இவ் அமைப்பு இவரின் தலைமையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி பெண்கள் தொடர்பான விடயங்களில் கூடிய அக்கறை செலுத்துவதையும், பல அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடுவதையும், பெண்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்தி வருவதனையும் இதன் மூலம் தமிழ் முஸ்லிம் பெண்களிடையே பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெற்று வருவதையும் கண்டு மிகவும் பெருமை கொள்கிறேன்.

இவர்களின் இச்செயற்பாடுகள் மேலும் வளரவும் இவ் அமைப்பினால் பெண்ணினம் நலமும், வளமும் பெற்று பெருமை பெறவும் மனமார வாழ்த்துகிறேன்.

நன்றி

இது உங்கள் நூல் சுத்தமாக வைத்திருக்கவும்


ச. செந்துராசா
தலைவர்
அம்பாறை மாவட்ட
அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம்.

19. 07. 1999
Tel. No. : 067 - 77475
Fax No. : 067 - 77053
E.Mail : Senthu @ eureka.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



பல இன்னல்களுக்கிடையில் வாழும் மக்களின் வாழ்வை வளம் படுத்த உருவாக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இன்று உலகில் பல பகுதிகளிலும் சேவையாற்றி வருகின்றன.

இத்தகைய நிறுவனங்களில் அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனமும் ஒன்றாகும். இந்நிறுவனம் இன, மத, பேதமின்றி பெண்களுக்காக பல சேவைகள் செய்து வருகின்றது.

இந்நிறுவனம் சிறப்புற்று மக்களுக்கு மேலும் பல சேவைகள் புரிய வேண்டுமென மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- நன்றி -

அன்புடன்

திருமதி. அன்(B) பேரியா ஹனீ(f)பா

திட்ட ஆலோசகர்,

றோயல் நெதர்லாந்து தூதரகம்,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



பெண்கள் அபிவிருத்தி மன்றத்தால் வெளியிடப்படும் இச்சஞ்சிகை பெண்களுக்கு ஒரு ஒளிவிளக்காக அமைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்து பெண்களின் முன்னேற்றத்திற்கு சேவையாற்றி வரும் பெண்கள் அபிவிருத்தி மன்றத்தின் இந்த பெண்கள் விழாவினைக் கண்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இவ்விழா பெண்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரு வதுடன் பெண்களுக்கு ஊக்கத்தையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வல்லன. தொடர்ந்தும் இம்மன்றம் பெண்களின் வளர்ச்சிக்கு உறுதியாக விளங்க வேண்டுமென வேண்டி அனைவருக்கும் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

*திருமதி. பேல். ஸ்டீபன்*
*பெண்கள் அபிவிருத்தி நிலையம்,*
*கண்டி.*

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் இன்று இப்பிரதேசத்தில் முன்னிலையில் உள்ள ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும்.

பெண்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விடயங்களையும் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து நடைமுறைக் கேற்றவகையில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

ஒரு ஆணைப் பயிற்றுவிப்பது ஒரு தனிமனிதனைப் பயிற்று விப்பதற்கு சமன். ஆனால் ஒரு பெண்ணைப்பயிற்றுவிப்பது ஒரு குடும்பத்தைப் பயிற்றுவிப்பதற்குச் சமன் ஆகும். முக்கியமாக, இனமத வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று சகலரையும் ஒரே வகையான பிரஜைகளாகக் கொண்டு தலைமைத்துவப்பண்பை ஊக்குவிப்பதில் இந்நிறுவனம் காட்டும் பங்களிப்பு மிகவும் முன்மாதிரியாகும்.

இக் கடமையில் மிகவும் முன்னின்று உழைக்கும் தலைவர் திருமதி இந்திராணி மகாலிங்கம், இணைப்பாளர் ஜனாபா தக்வா இஸ்மாயில் ஆகியோர் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இவர்கள் தமது முழுநேர உழைப்பை இக்கடமைக்காக அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களது இப்புனித பணி மேலும் வளர வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

*ஏ. எல். எம் பளீல்*
*பிரதேச செயலாளர்*
*கல்முனை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

மூன்றாம் தசாப்தத்தை நோக்கி நாம் அனைவரும் காலடி எடுத்து வைக்க முயலும் இவ்வேளையில், மானிட சமூகம் எதிர் நோக்கும் மாபெரும் சவால்களில் ஒன்றான மகளிர் பிரச்சனை மட்டில் விசேட அக்கறை கொண்டு அவர்களின் அபிவிருத்திக்கென அனைத்துத் துறைகளுக்கூடாகவும் அர்ப்பணிப்புடன் உழைத்து வரும் "பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினை குவேக்கரின் சமாதானமும், சேவையும்" அமைப்பின் சார்பில் வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிரின் ஆக்கங்கள், படைப்புகள் தாங்கி வெளிவரும் இம் மலரானது மகளிர் மத்தியில் மென்மேலும் படைப்பாற்றலையும், விழிப்புணர்வையும் அளிப்பதாக.

சமூகங்களுக்கிடையில் பதட்டத்தை தணித்து வெறுப்பினை அகற்றி பரஸ்பர புரிந்துணர்வுடனும் நல்விளக்கத்துடனும் அன்றாட பிரச்சனைகளை தாமாகவே அணுகி வன்முறையற்ற வகையில் தீர்த்துக்கொள்ளத்தக்க வழிவகைகளை கண்டுணரச் செய்வதிலும் பாதிக்கப்பட்ட மக்களை சக்தியூட்டி பாதிப்பிலிருந்து விடுபட்டு அமைதியுடன் வாழச் செய்வதிலும் ஈடுபட்டிருக்கும் எமது அமைப் பானது மகளிர் அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டிருக்கும் தங்கள் அமைப்புடனும் கைகோர்த்து பல சமூகங்களைச் சேர்ந்த மகளிருடன் பணிபுரிய ஆவல் கொண்டுள்ளது.

எதிர் வரும் நாட்கள் இனிதாகவும் முன்னேற்ற கரமானதாகவும் திகழ எமது வாழ்த்துக்கள்.

இது உங்கள் நூல்
சுந்தரம். வைத்தியக்கவும்

குமாரி, ராஜன்
குவேக்கரின் சமாதானமும், சேவையும்
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



*அம்பாரை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் வெளியிடும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நானும் ஓர் பெண் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் ஸ்தாபகர் செந்தூராசாவின் அதீத ஆற்றலின் விளைவால் பெண்கள் அபிவிருத்தி நிறுவனமும் வளர்ச்சி கண்டுள்ளது.*

*"மண்ணுக்குள் மாணிக்கம் உண்டு ஆனால், பெண்ணிலோ பேராற்றல் நிறைந்துள்ளது" அவர்களுக்குரிய வாய்ப்பு வழங்கப் படும்போது அவை வெளிப்படுகின்றன. "வீட்டிற்குள்ளே பெண்ணை பூட்டிவைத்த வேதகாலம் அன்று நாட்டை ஆளும் திறன் நங்கை இன்று" என்பதற்கமைவாக கிராமப் புறங்களில் உள்ள பெண்களுக்கு உயர்வாழ்வும் உதவிக்கரமும் கொடுக்கும் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தைப் பாராட்டுகின்றேன். இதன் தலைவி திருமதி இந்திராணி மகாலிங்கம் அவர்களதும் ஏனைய நிர்வாகிகளினதும் பணிகள் தொடர வாழ்த்துகின்றேன்.*

*திருமதி. ஜெகதீஸ்வரி நாதன் **(B.A)***
*தம்பிலுவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



அம்பாரை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் இவ்வாண்டு சர்வதேச பெண்கள் தினத்தை ஒட்டி விழா எடுத்தமை பொருத்த மானது இம்மாவட்டத்தில் உள்ள பெண்களை இன மத பேதமின்றி ஒருங்கிணைத்துச் செயலாற்றி வருகிறது. பயிற்சிகள் பல அழித்து பெண்கள் நிலையை மேலோங்க வைத்துள்ளது.

குறிப்பாக முஸ்லிம் பெண்கள் கலாச்சாரம், சமய கட்டுப்பாடு என்ற போர்வையில் வீட்டுக்குள்ளே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களாலேயே சமூகத்திற்கு பல சாதனைகளைச் செய்ய முடியும் என்று எடுத்துக்காட்டக் கூடிய நிலையில் இந்தப் பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் செயலாற்றிக் கொண்டு வருகிறது. பெண்களின் பெயரிலே சேமிப்பின் ஊடாக சொத்துக்களைச் சேர்ப்பதற்கு பழகிவிட்டார்கள் வீடே உலகம் என வாழ்ந்த பெண்கள் உலகமே வீடாக மாற்றி சமூகப் பணியில் மிக ஆர்வத்துடன் செயலாற்றி வருகிறார்கள். இவர்கள் சேவை வளரவும் தொடரவும் இந்த வேளையில் எனது ஆசியை தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

REFERENCE SEC...
உசாத்துணை

இப்படிக்கு
திருமதி/ தக்வா இஸ்மாயில்.
மாவட்ட இணைப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் சர்வதேச பெண்கள் தினத்தை யொட்டி வெளியிடும் சிறப்பு மலருக்கு இச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பெண்கள் அமைப்புக்கள் நடந்து வந்த பாதை, எடுத்த முயற்சிகள், கிடைத்த முன்னேற்றங்கள் பற்றி தெரிவிப்பது பொருத்தமென நினைக்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் பெண்களது அபிவிருத்தி, பொருளாதாரம், உரிமை, சமத்துவம், குறித்து பெண்கள் அமைப்புக்கள் ஆங்காங்கே முனைப்புடன் செயலாற்றி வருவதை காணமுடிகின்றது. தமது நிலை பற்றி விழிப்படைந்தவர்களாக பெண்கள் வீதிக்கு வந்து கிராம அபிவிருத்திப் பணிகள் தொடக்கம், கொள்கை அளவிலான மாற்றங்கள் வரையும், அதனை கிராம, நகர, மாவட்ட, தேசிய, சர்வதேச மட்டங்கள் வரையும் வெளிப்படுத்தும் அளவிற்கு வேகமான ஒரு வளர்ச்சி நிலை இன்று தோன்றியுள்ளது. அத்துடன் இன்று இலக்கிய வடிவங்களின் வாயிலாகவும் தமது கருத்துக்கள், உணர்வுகள், தகவல்கள் போன்றவற்றை வெளிப்படுத்தி வருவதும் வளர்ச்சிப் போக்கின் அடுத்த அம்சமாகும்.

இந்தப் பெண்கள் அமைப்புக்கள் சுயமாகவும், கூட்டாகவும் இயங்கிவருவதோடு பல துறைகளிலும் முன்னேறியுள்ளதை காணமுடிகின்றது. இந்த முன்னேற்றத்தை அவதானிக்கும்போது பெண்களால் பல விடயங்கள் ஆற்றமுடியும் என்பது மிகத் தெளிவாகத் தெரிவதோடு, நம்பிக்கைக்கு உரம் ஊட்டுவதாகவும் உள்ளது. இந்த முன்னேற்றகரமான மாற்றங்கள் குறித்து எமது சமூகம் உணரவேண்டும். இத்தகைய கருத்தானது நடைமுறையில் ஆற்றிய பணிகள் அனுபவங்களுக்கு ஊடாகப் பெறப்பட்டதே.

REFERENCE SEC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறான வேலைத் திட்டங்கள் மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கான பணிகளில் ஈடுபட்டுவரும் அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் பெண்களின் பொருளாதாரத் தேவை, பிரச்சினைகளை இனங்காணுதல், அவற்றின் தீர்வுக்கு வழிகாட்டல், விழிப்புடன் சகல மட்டங் களிலும் தலைமைத்துவத்தை ஏற்றல், இதன் வழி தமது சொந்தக்காலில் நிற்கவைத்தல் என்பவற்றைப் பிரதான நோக்காகக் கொண்டு செயலாற்றி வருவதைப் பாராட்டுகின்றேன்.

பாடசாலைகளில் கட்டுரை கவிதைப் போட்டிகளை நடாத்திய துடன், எழுதும் பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் இவ்வகையில் இம் மலர் பெண்களின் குரலாக ஒலிப்பது வரவேற்கத்தக்கது.

இந்த மலர் வெளியீட்டுடன் மகளிர் அமைப்புக்களின் தலைவிகளாக இருந்து பங்களிப்பு செய்வோரையும், அத்துடன் எழுத்து, மூலிகை வைத்தியம், ஓவியம், நாடகம் போன்ற துறைகளில் தமது திறமைகளை வெளிப் படுத்தியவர்களில் சிலரை இனங்கண்டு அவர்களை கௌரவிக்க நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கக்கூடிய அம்சமாகும். இத்தகைய தொடர்பாடானது மேலும் பலரை ஊக்குவிப்பதற்கு தூண்டும் வகையிலான சிறந்த யுக்தி அம்சமாகும். சிறப்பான முறையில் செயலாற்றி வரும் அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் சேவைகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

"கரங்களை இணைத்து பெண்களைக் காக்க
ஏற்ற வழி அமைப்போம்"

ஜெயந்தி தளையசிங்கம்
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அமைப்பு......

அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் 1997ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது அம்பாறை மாவட்டம் முழுவதும் இயங்கி வருகிறது. இன மத பேதமில்லாது பெண்களின் முன்னேற்றத்திற்காக அரிய பல சேவைகளைச் செய்து வருகிறது. இந்த நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக சீடா நிறுவனம் 650.000 ரூபாவைத் தந்து உதவியுள்ளது.

எமது அமைப்பில் நான்கு வெளிக்கள ஊழியர்களும், ஒரு காரியாலய ஊழியரும், இரண்டு இணைப்பாளர்களும் வேலை செய்கிறார்கள். இந்த நிறுவனம் அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் இணை நிறுவனமாக இயங்கி வருகிறது.

நாம் கடந்த காலங்களில் வருடா வருடம் ஒவ்வொரு பிரதேசம் என்னும் ரீதியில் மகளிர் தின விழாவைக் கொண்டாடி வருகிறோம். 1997ல் கல்முனையிலும், 1998ல் காரைதீவிலும், 1999ல் திருக்கோவிலிலும் இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினோம். இவ்விழாவின் பெண் தலைவிகளை கௌரவித்தல், பெண் கல்வியை ஊக்குவிக்குமுகமாக கல்விப் பொதுத்தர சாதாரண தரம், உயர்தரம் மற்றும் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பெண் பிள்ளைகளில் கூடிய பெறுபேற்றைப் பெற்ற பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கியும் வருகிறோம் அத்தோடு துறை சார்ந்த ரீதியாக சிறந்த பெண்களை கௌரவித்து வருகிறோம்.

கல்முனையில் சட்டபூர்வமாகத் திருமணப் பதிவின்றி இருந்த சுமார் 80 குடும்பங்களுக்கு இலவச திருமணப் பதிவை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் நடாத்தி வைத்தோம்.

கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழில் செய்வதற்காக தொழிற் பயிற்சி வழங்கியதோடு கணக்கு வைப்பு முறைப் பயிற்சியும் அளித்து சிறு தொகை நிதியும் வழங்கி வருகிறோம். கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைத்து சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதோடு, கிராம முன்னேற்றத்திற்காக பல சேவைகளையும் பெண்கள் சிரமதானம் மூலம் செய்து வருகிறார்கள். இக் கிராமக் குழுக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு அபிவிருத்தி, தலைமைத்துவம், பெண்களும் சட்டமும், பெண்கள் மீதான வன்முறை, பால் நிலை அபிவிருத்தி போன்ற பயிற்சிகளை சிறந்த வளவியலாளர்கள் மூலம் வழங்கி வருகின்றோம்.

எமது நோக்கம் இம்மாவட்டத்திலுள்ள அனைத்துப் பெண்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஆவண செய்தலும், பெண்களை சொந்தக் காலில் (பேண்தகுநிலை) நிற்க வைத்தலுமே ஆகும்.

எமது அமைப்பின் மூலம் மாவட்டத்தில் இனங்களுக்கிடையே நிரந்தரமான சமாதானம் உருவாக்க முடியும். என்று கருதி அதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறோம்.

**பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்,**
**அக்கரைப்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1999ல் மகளிர் தின விழாவில் நிர்வாகிகளிடையே நடாத்தப்பட்ட போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை**

# யுத்த சூழலில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" எனப் பாரதியும் "மங்கையாய்ப் பிறப்பதற்கே பெரும் மாதவம் செய்திட வேண்டுமடி" என தேசிய விநாயகம் பிள்ளையும் பெண்ணின் பெருமையைப் போற்றும் அதே வேளை இன்றைய யுத்த, சூழல் பெண்களை இழிவு நிலைக்குத் தள்ளி இருக்கின்றது. அந்த வகையில் யுத்த சூழலில் பெண்களுக்கெதிரான வன்முறைகளாக கல்வி, பாலியல் வன்முறை திருமணம், தொழில், குடும்பச்சுமை, பொருளாதாரம், உளவியல் என பல்வேறுபட்ட விடயங்கள் பெண்களுக்கெதிரான வன்முறைகளாக அமைவதனை அவற்றை ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கல்வி சார்ந்த விடயங்களும் பெண்களுக்கெதிரான வன்முறை களாகவே உள்ளது. அதாவது ஆரம்பக் கல்வியை முடித்த ஒரு பெண்பிள்ளை தனது மேலதிகப் படிப்பினை மேற்கொள்ள வெளியிடத்துக்குச் செல்ல வேண்டிய நிலையே ஏற்படுகின்றது. இந்த நிலையில் இந்த யுத்த சூழலில் அடிக்கடி குண்டு வீச்சு, கண்ணிவெடி, மோட்டார் குண்டு தாக்குதல் போன்ற சம்பவங்கள் இடம் பெறும் வேளையில் அவளது மேலதிகப் படிப்பினை மேற்கொள்ள இத்தகைய சூழல் அவளுக்குத் தடையாகவே அமைகின்றது. அது மட்டுமன்றி யுத்த நிலையால் குடும் பத்திலுள்ள தந்தை அல்லது சகோதரன் ஆகியோரின் இழப்புக்களால் குடும்பத்தின் பராமரிப்பு, வருவாய் ஆகியன இழக்கப்படும் வேளையில் அங்கும் பெண்களின் கல்வி மழுங்கடிக்கப்படுகின்றது. மற்றும் கல்வி கற்கச் செல்லும் பாடசாலைகளில் திடீரென சுற்றி வளைப்பு, இனந்தெரியாத நபர்களினால் பெண் பிள்ளைகள் கடத்திச் செல்லப்படுதல் போன்ற சம்பவங்களினால் அன்னையரும், பெண் பிள்ளைகளுமே பாதிக்கப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் பாலியல் வன் முறையும் ஒன்றாகும். பாலியல் வன்முறை, பலாத்காரம் என்பவை சமூகத்தில் மிக மோசமாக மலிந்துள்ளன. இராணுவத்தினரின் சோதனையின் போது பெண்கள் பலாத்காரமாக பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மற்றும் காணாமற்போதல், சட்டத்திற்குப் புறம்பான மரணதண்டனை, சிறை வாழ்க்கை போன்ற அசாதாரண நிகழ்வுகளையும் பெண்கள் எதிர்நோக்குகின்றனர். விசேடமாக சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள், கும்பலாகச் சேர்ந்து பாலகிகளை பாலியல் துன்புறுத்தல் களுக்கு உட்படுத்தி கொலை செய்து புதைப்பது, பெண்கள் அல்லது சிறுமியர்கள் கடத்திச் செல்லப்பட்டு விபச்சாரத்தில் ஈடுபடுதல் என எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

சம்பவங்களுக்குப் பெண்கள் முகங் கொடுக்கின்றனர். இலங்கையில் இத்தகைய பாலியல் வன்முறைகளுக்கு இலக்காகி இரையாக்கப்பட்ட வடக்கில் கிருஷாந்தி, கிழக்கில் கோணேஸ்வரி, தெற்கில் மன்னம் பேரி போன்றோர் இதற்கு எடுத்துக்காட்டுக்கள் ஆகும். இன்னும் எத்தனை, எத்தனையோ பாலியல் வன்முறைகள் நாளுக்கு நாள் நடந்த வண்ணம் இருக்கலாம். ஆனால், அவை யெல்லாம் சந்திக்கு வராத உண்மைகளாகவே மறைந்து கிடக்கின்றன.

யுத்த சூழலில் பாதிக்கப்படுபவர்கள் பலராக இருந்தாலும் பொது வாக பாதிக்கப்படும் வர்க்கம் பெண்களே ஆகும். அந்த வகையில் திருமணமும் பெண்களுக்கு எதிரான வன்முறையாகவே உள்ளது. ஏனெனில் யுத்த சூழலில் பெருமளவு நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் ஆண்களேயாகும். அத்தோடு பெருமளவு ஆண்கள் இருந்தும் காணமற் போயும் உள்ளனர். இதனால் நாட்டில் ஆண்களின் தொகையைவிட, பெண்களின் தொகை அதிகமாக உள்ளதால் தனக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை எடுக்க முடியாமை ஒரு புறம் இருக்க, மறுபுறம் தனது திருமணவயது பின்போகின்றது என்ற உளரீதியான தாக்கம், ஏனைய ஒரு சில ஆண்கள் உள்நாட்டுப்போர் காரணமாக வெளிநாடு சென்றமையால் உள்நாட்டில் தங்களின் வயதுக்கு ஏற்ற ஆண்களின் தட்டுப்பாடு என பெண்கள் பல தாக்கங்களுக்கு உட்பட்டு தனது எதிர்கால வாழ்க்கைக்கு "இலவு காத்த கிளியாக" ஏங்கும் நிலைக்கு யுத்த சூழல் அவளுக்கு எதிராக அமைந்திருக்கின்றது என்றே கூறலாம்.

பெரும்பாலும் தொழில் வாய்ப்புக்களும் பெண்களுக்கு வன்முறை களாகவே அமைந்திருக்கின்றது. தான் வேலைக்குச் செல்லும் இடம் பாதுகாப்பற்ற இடமாக அமைவதால் வீட்டவர்களினதும், சமூகத்தவர்களினதும், பழிச் சொற்களுக்கு அஞ்சிய பெண் அவ்வேலையை விடவே முடிவெடுக்கின்றாள். மற்றும் இனந்தெரியாதோரின் திடீர் தாக்குதல், அல்லது கண்ணிவெடி போன்ற அசம்பாவிதங்கள் இடம் பெறும் வேளையில் அத்தொழில் செய்யும் இடத்திற்குச் செல்ல பெண்ணானவள் தயங்குகின்றாள். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் தனது உயிருக்குக் கூட ஆபத்தான நிலை ஏற்படலாம் என்ற அச்சமேயாகும். மற்றும் தொழில் செய்யும் இடங்களில் தொழிலதிபர்களாலும், தொழில்விட்டு வரும் பாதையில் ஆடவர்களின் பலாத்காரம் அல்லது அச்சுறுத்தல்களுக்கும் பெண்ணானவளே ஆளாகின்றாள்.

யுத்தம் காரணமாக பெண்கள் கணவன்மாரைப்பறி கொடுத்து குடும்பத்தின் பிரதான உழைப்பாளர் பாத்திரத்திற்குத் தள்ளப்படும் அதேவேளை, குடும்பச் சுமையையும் அவளே ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் தள்ளப்படுகின்றாள். இக்குடும்பச்சுமையின் நிமிர்த்தம் அவள் வெளி நாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் செல்கின்றாள். அங்கு, வேலைக் கஷ்டம் ஒருபுறம், மறுபுறம் வீட்டு எசமானனின் பலாக்காரச் செயல் என இரட்டைச் சுமைக்கே உள்ளாக்கப்படுகின்றாள். இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் சில சமயம் பத்து வயது சிறுமிகூட அவ்வீட்டுச் சுமைக்கு உள்ளாக்கப் படலாம். மற்றும் வன்செயலால் ஊனமுற்று படுத்த படுக்கையாக விருக்கும் கணவனின் சுமையென எல்லாவகைச் சுமையையும் பெண்ணானவளே தாங்குகின்றாள்.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு வீட்டுத்தலைவன் யுத்தம் காரணமாக எந்தவொரு தொழிலையும் செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது அங்கு பெண்ணே மறைமுகமாகவும் தாக்கப்படுகின்றாள். வன்செயல்களால் அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்பவர்களில் பெண்களே பல்வேறு வன்முறைகளுக்கும் உட்படுகின்றார்கள் மற்றும் மக்களே மக்களின் பொருள்களை சூறையாடுதல், விதவைகளாக்கப்பட்டு எதுவித வருமானமுமற்றிருத்தல், வன்செயலால் உடமைகளுக்கே தீ வைத்தல் போன்ற எல்லா அசம்பா விதங்களிலும் தாக்கப்படுபவள் பெண்ணேயாகும்.

யுத்த சூழலில் பெண்ணானவள் உள ரீதியான பாதிப்புக்கும் உள்ளாக்கப் படுகின்றாள். யுத்த சூழலில் சில அசம்பாவிதங்கள் நடை பெறுவது உண்மையே இந்த வேளையில் நாட்டின் சட்டங்களும் சீர்குலைந்தே காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்படும் சமயத்தில் தனியான ஒரு பெண்ணானவள் உண்மையாகவே உளரீதியாக தாக்கப்படுவாள். இந் நிலையில் அவளால் தனது கல்வியை, தனது திருமணத்தை, தனது எதிர்காலத்தை, தனது உடமைகளை என எல்லாவற்றையும் துறந்து பித்துப் பிடித்த நிலைக்கோ அல்லது தற்கொலை முயற்சிக்கோ உட்படுகின்றாள். இத்தகைய சம்பவங்கள் நாட்டின் சில இடங்களில் யதார்த்த பூர்வமாக நடந்த சம்பவங்களாகும்.

நாட்டில் பெண்களுக்கு உதவுவதற்கென "சுமித்திரயோ, இன்போம், பெண்ணின் குரல், பெண்களது சூழல் மையம், சமாதானத்திற்கான பெண்கள், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், காந்தா சக்தி, இலங்கை பல்கலைக்கழக பெண்கள் சங்கம்" உள்ளூர் பெண்கள் அமைப்புக்கள் போன்ற எத்தனையோ அமைப்புக்கள் செயல்பட்ட போதிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்துகொள்ளவில்லை என்பது சோகமானதாகும். மேற்கூறிய பிரச்சினைகளில் இருந்து பெண்களை விடுவிப்பதற்காக அரசு சட்டம், நீதி போன்ற விடயங்களில் தீவிர கவனம் செலுத்துவதாலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தனித்தும், சுயமாகவும் இயங்கக்கூடிய சுயதொழில் பயிற்சி அளித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களைச் செய்து அவளை வலுவூட்டி 'மண்ணின் நல்ல மகளாக' வாழ வழி செய்திடலாம்.

செல்வி. கந்தப்பன் கௌரிநாயகி;
கலைமகள் வீதி,
தம்பிலுவில் - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999இல் மகளிர்தின விழாவில் நிர்வாகிகளிடையே நடாத்தப்பட்ட போட்டியில் பரிசு பெற்ற கவிதை

## நானும் ஓர் பெண்

மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் வேண்டுமெனும்
சங்க மீது வார்த்தையின் சரிதைதனைக் கேட்டிடுவீர்
நானும் ஓர் பெண் நான் பாடும் கவித்தலைப்பு
வானும் இதைக் கேட்டு வடிக்கும் கண்ணீரை

பத்து வயதுப் பருவம் பள்ளி படிக்கும் வேளை
சொத்தான என் அம்மா சொர்க்கலோகம் சென்றாளே
குடும்பச் சுமை தாங்கி குதூகலம் இழந்த நான்
அடுக்களைக்குள்ளே அடங்கிய ஓர் பெண்

அப்பாக்கோ என் மீது அணுவளவும் அன்பில்லை
தப்பான வழிகளிலே தான் மட்டும் சுகம் கண்டார்.
மங்கை வயது வந்த மறுமாதம் என்னை
தங்கை மகனுக்கு தாரமாய்க் கட்டி வைத்தார்.

திருமணம் முடிந்து சிலநாள் சென்ற பின்
அருமந்த அத்தானோ அடிமையானார் மதுவிற்கு
தினமும் அடிஉதையும் திட்டும் பேச்சும்
நரக வாழ்வு அனுபவித்த நானும் ஓர் பெண்

போதையில் ஒரு நாள் பேருந்து தாக்கி
பாதையில் அவரும் பரிதாப மரணமானார்
இல்லற வாழ்விலும் இன்பம் எதுவுமின்றி
சொல்லரிய துன்பமிகு சோகமே என் வாழ்வு

கணவனை இழந்த கைம் பெண் நானோ
துணை எவருமின்றி துயரம் கொண்டிருந்தேன்
வெள்ளையாடை கட்டி வேடிக்கை பார்க்கின்ற
நல்லோர் உலகில் நானும் ஓர் பெண்

மங்கள நிகழ்வுக்கு மகிழ்வுடன் நான் செல்ல
தங்கு தடையிட்டது சமுதாயம் எனக்கின்று
பாட்டாடை குங்குமம் பசுமலர் மஞ்சள்
தொட்டால் பாவமென சொல்லி பயமுறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் அறிந்தெவரும் உதவ வரவில்லை
கள்ள எண்ணமுடன் காமுகன் ஒருவன் வந்தான்
பொல்லால் அடித்தேன் போனான் ஓட்டமாக
நல்ல வாழ்வு தேடும் நானும் ஓர் பெண்

பாவையென் கற்பை பழிப்பார் என்பதால்
சாவை மறந்து நானும் சாந்தமடைந்து விட்டேன்
பெண்கள் அமைப்பொன்றில் பெருமையுடன் சேர்ந்து
கண் போல் சேவை செய்து கவலை மறந்திருந்தேன்

நான் ஓர் பெண்ணாய் நற்பணி பல புரிந்து
காண்போர் போற்ற கடமைதனைச் செய்தேன்
கோழையல்ல நானும் கொண்ட உயிரழிக்க
நாளை வாழத்துடிக்கும் நானும் ஓர் பெண்

குடத்துள் விளக்காக கூண்டுக் கிளியாக
மடமைக் குணத்துடன் மாண்பிழக்க விரும்பவில்லை
மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை ஒழித்து
சாதனை பல புரிவேன் சரித்திர நாயகியாய்.

**எஸ். ரஞ்சினி**
**தம்பிலுவில் - 02**

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே!

**அன்பு தான் இன்ப ஊற்று என்றால்**
**அந்த ஊற்றைத் தோண்டி எடுக்கும்**
**கருவிதான் உன் பொறுமை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பிரிவு கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

# வீட்டுக்கும் நாட்டுக்கும் விடிவெள்ளி பெண்கள்

"வல்லமை தாராயோ பெண்ணே இம்மாநிலம் பயனுறவே" என்பது காடும் கமழும் கற்பூரச் சொற்கோ கவிஞர் பாரதி கருத்து. ஆமாம் இன்றைய உலகிலும், கடந்தகாலங்களிலாயினும் சரி பெண்களின் பங்கு வீட்டிலும், நாட்டிலும் மகத்துவம் மிக்கதாகவே உள்ளது. பெண்மையினை இந்துமதம் சக்தியின் வடிவமாகக் காண்கின்றது. இதே போன்று இஸ்லாம் மதத்தில் திருக்குர்ஆன் வசனம் கூறுகின்றது. "வீட்டின் கண்கள் பெண்மணியே" என்று கூறுகின்றது. பெண்கள் தினத்தை ஒட்டி கடந்த காலத்தின் 8வது பீக்கிங் மாநாட்டில் ஒரு பெண் குடும்ப தரத்திலும் அவள் மூலமான நாட்டின் அபிவிருத்திக்கும் உரிய மகா சக்தி படைத்தவள் அப்படிப்பட்ட பெண்களின் நலன் பெண்களாகவே தாக்கப்படுவதும் பிறரால் ஓம்பப்படுவதும் இன்றியமையாத ஒன்றாகும்" என்று குறிப்பிடுகின்றார் பர்மிய பெண்மணி ஆங்சாங்சூயி.

ஆமாம் பெண்கள் நாட்டுக்கும், வீட்டுக்கும் விடிவெள்ளி என்பது எந்த அளவிற்குப் பொருந்தும்? இப்படிப்பட்ட பெண்களின் இன்றைய நிலை எவ்வாறமைகின்றது. பெண்களின் முக்கியத்துவம் பேணப்பட நாடுகள் அதிலும் இலங்கை நாடு எடுக்கும் முக்கிய நடவடிக்கைகள் என்ன? விடிவெள்ளி போன்ற அப்பெண்களின் கடந்தகால கறைபடிந்த நிகழ்வுகள் யாதேனும் ஏற்பட்டதுண்டா? என்கின்ற கேள்விகளின் அடிப் படையில் அடியேன் இக்கட்டுரைத் தலைப்பினை ஆராய முற்படுவது தவறல்ல என நினைக்கின்றேன். காரணம் கட்டுக்கோப்பு மிக்கதே கட்டுரையின் சிறப்பு.

பெண்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் விடிவெள்ளியாகவே இருக்கின்றார்கள். பொருத்தமான உவமான உவமேயம் விடியும்வரை ஒளிகொடுத்து சூரியன் என்னும் பேரொளி மாநிலத்து மாந்தர்களையடையும் வரை அந்தவெள்ளி பேரொளி கொடுப்பது நாமறிந்த உண்மை. வீட்டில் ஒரு குடும்பத்தை சீராக கொண்டு செல்வதற்கு உறுதுணையாக அமைபவள் பெண். பெண் எதிர்கால சமுதாயம் சிறப்புற அமைய குழந்தைகளைப் பெற்று நற்பண்பு காட்டி வளர்க்கின்றாள் கணவனைக் கண் போன்று மதிக்கின்றாள் கற்புக்கரசியாக திகழ்கின்றாள். "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே இந்தியா தங்கப்பதக்கத்தினை பெற்றதும் பெண்ணாலே" என ஒரு கவிஞன் கூறுகின்றான் இன்று உலகிலே நடக்கின்ற செயற்கை அழிவுகளையும் தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை வாய்ந்தவர்களாக பெண்ணுள்ளார்கள். உதாரணமாக வங்காளதேஷ் நாட்டின் பிரதமர் ஒரு பெண்மணிதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேக் கசீனா வாஜித் சாந்தி வாகினி கிளர்ச்சி வாதிகளின் நட வடிக்கையினை பேச்சுவார்த்தை மூலம் சமாதானப் படுத்தினார். பெண்ணினத்தின் மேன்மை கண்டு 1998ம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு (ஐ.நா) அவருக்கே கிடைத்தது.

இன்றைய நிலையின் எம் நாட்டின் தலைவர் கூட ஒரு பெண் மணியே! இந்திய நாட்டின் இந்திராகாந்தி. 1996ம் ஆண்டில் சமாதான நோபல் பரிசினை வென்ற பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங்சூகி. அமெரிக்க நாட்டின் முதற்பெண்மணி ஹிலரி கிளின்டன், அன்புக்கும் பாசத்திற்கும் இருப்பிடமான அன்னை தெரேசா, டயானா போன்ற பெண்மணிகள் பெண்ணினத்தினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என்பதை அகில உலகிற்கு எடுத்துக்காட்டிய கண்மணிகள், முன்னோடிகள் இந்தோனேசியாவின் திகார் மாநிலத்தின் இனப் படுகொலை வன்முறைகளை தடுத்து நிறுத்துவதில் பாரிய வெற்றிகண்ட எம் நாட்டைச் சேர்ந்த சுனிலா ஒபயசேகர எனும் பெண்மணிக்கு ஐ.நா.சபை மனித உரிமைக்கான விருதினை வழங்கிக் கௌரவித்தது. இதே போன்று சர்வதேச மட்டத்திலே முன்னணியில் திகழும் எம் நாட்டின் வீராங்கனை சுதந்திகாவிற்கு இவ்வாண்டிலே விளையாட்டிற்கான "டங்கன்வைற்" விருதுகிடைத்தது. உலகிலே தலைசிறந்த பெண்மணியானவளும், நடிகையுமான ஒரு இந்தியப் பெண்மணிக்கும், அமெரிக்காவைச்சேர்ந்த கிளியோபட்றா சிறப்புமிகு "ஹொலிவூட்" நடிகர் விருது கிடைத்தது. "வலன்டினா வலன்டைம்" எனும் பெண்மணி சந்திரனில் முதன்முதலில் காலடி வைத்தவள் இத்தனை மகத்துவம் மிக்க பெண்மை ஒடுக்கப்பட்டு அடக்கப்படுமானால் அது பாவம். "அச்சமும் நாணமும் நாய்களிற்கு வேண்டும். வீரம் நிறைந்த ஞானம் என்பன பெண்மைக்கு" வேண்டும் அறியாமை எனும் காசித் சுருளை எரித்தெறிய வேண்டும் அடிமைத் தன்மைகளை உமிழ்ந்து விலக்க வேண்டும் நிமிர்ந்த நந்நடை நேர்கொண்ட பார்வை யார்க்கும் திறம்பாத நல்லொழுக்கம் உள்ள நவயுகம் நாடும் புதுமைப் பெண் ஒருவளை அவள் மூலமாக வீட்டின் (சமூக), நாட்டின் விடுதலை அபிவிருத்திப் பாங்கினை "தன் புதுமைப் பெண்" எனும் கவியிலே கவிஞர் பாரதி விரிக்கின்றான்.

குடும்பரீதியாக (வீட்டில்) பெண்விடிவெள்ளி போன்று மட்டுமல்ல, தெய்வமாக நான் காண்கின்றேன். அதற்கு என் அன்புத் தாயையே உதாரணமாக நினைக்கின்றேன். தாயற்ற ஒரு குழந்தை அநாதை எனும் பட்டத்தை வாங்குகின்றது. மனைவியற்ற கணவன் தபுதாரன் என பட்டம் வாங்கி இகழப்படுகின்றான். உளவியல் மேதை சிக்மண்ட் புரைட் கூறுகின்றார். பெண்ணின் அரவணைப்புடன் வளர்க்கப்படும் குழந்தையே எதிர்காலத்தில் நிறைந்த ஆளுமைப் பண்பு உடையதாகின்றது. "கணவனுக்கு நன்றாக சமைத்துக்கொடுப்பதும் அவள் இன்பங்களை கணவன் இன்பமாகக் காணுவதும் பெண்மை" இந்திய நாட்டிலே பெண்கள் எப்போது எவருதவியும் இன்றி தனியாக நடமாடுகின்றாளோ அன்றே



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்நாடு அபிவிருத்தி அடைந்த நாடு என்கின்றார் "மகாத்மா காந்தி எந்த ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கின்றாள் என்று ஆங்கில நாட்டுப்பழமொழி கூறுகின்றது. துளசிதாசர் தன் இரமாயணத்தில் இராமர் கூறுகின்றார் சீதை என்னருகில் இல்லாத போதெல்லாம் என்னுள்ளம் நடுநடுங்குகின்றது. பொறுமைத் தன்மையிலும் குடும்ப நடத்தை உயர்வு படுத்துவதிலும் பெண்களின் பங்கு மகத்துவ மிக்கது இதனை வார்த்தை ஜாலங்களில் வர்ணிக்க முடியாது ஆனால் வைரமுத்து கூறுகின்றார் பெண்ணே அற்றதாக இப்பூமி இருந்தால் நிலையினை எண்ணிப்பாருங்கள் ஆமாம் சிந்தனைக்குரிய விடயம்.

இப்படிப்பட்ட மகத்துவம் பெண்கள் சில சந்தர்ப்பங்களில் பெண்ணினமே நாணும் படியாக துரதிஷ்ட சம்பவங்கள், பெண்மையினை மானபங்கப்படுத்தும் சந்தர்ப்பங்கள் காளையர் போன்றுலாவும் காடையர்களால் நடக்கவும் தவறவில்லை. "வன்மையுள் வன்மை மடவார் பொறை" என்கிறார் கண்ணதாசன். இந்துமதம் பெண்மையினை தெய்வமாக இறைவனது இயக்கத்திற்கும் சகல அண்ட சராசரங்களின் இயக்கத்திற்கும் (பெண்ணே) சக்தியே காரணமாக உள்ளது என்று கூறியது. அதுதான் அர்த்த நாரீஸ்வரர் உணர்த்தும் தத்துவம். இப்படிப்பட்ட பெண்மையின் மகத்துவமும் கற்பும் புனிதமிக்கது.

ஆனால் மகளிர் மேன்மையினை அறிந்து அவர்கள் நலன் காக்க மகளிர் விவகார அமைச்சு (ஹேமாரத்நாயக்க), சேவாவனிதா இயக்கம், பெண்கள் மகவிடுதலை இயக்கங்கள் போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் குடும்பநலன் காக்க இன்றைய நிலையில் பெண்ணினமும் தொழில் கொள்வது அவசியம். பெண்ணின் சுற்றம் காக்க பல்வேறு நாடு சென்று கலைஞான பண்பாடு கற்பது அவசியம் என பாரதி கூறியது மட்டுமல்ல பெண்ணாய் பிறக்க பெருந்தவம் செய்திடல் வேண்டும். பெண்மை அன்னை பராசக்தியின் வடிவம் என்பது அவர் கருத்து.

ஆனால் உலகியல் ரீதியாக நோக்குகின்ற போது "அடே நாம் காணும் இன்பம் அத்தனைக்கும் மேலாக பல்வேறு இன்பங்கள் அந்த கயல்விழியாளிடம் உண்டடா இதை உணரடா என அழுத்துகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

ஆனால் பெண்மை சில மனித உரிமைகளை மீறுகின்ற நாடுகளில் நாடு வீடு போற்ற வாழும் மங்கை இம்சிக்கப்படுவது மனம் வருந்தத்தக் கதும் மறுக்கமுடியாதது'மான உண்மைகளாகும். வேதகாலம், சங்ககாலம், சிந்துவெளி, இதிகாச புராணகாலம் போற்றிய பெண்மை இன்றும் போற்றப்பட்டாலும் அதே பெண்மை, கற்பழிப்பு போன்ற குரூர சம்பவங் களிற்கு ஈராக், இந்தோனேசியா, பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றதே. இதுமட்டுமல்ல குடும்பப்பெண் மேன்மை பொருந்தியவள் அவளை விபச்சாரம் செய்யும் ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாத வாறு நரகத்திற்கு தள்ளப்படுவான்" என்பது யேசு பிராணின் கருத்து. இதேபோல் ஒரு பெண்ணை ஒரு தடவைக்கு மேல் பார்க்காதே" என்பது நபி மொழி. ஆனாலும் இலங்கை நாட்டை நோக்கினால் பெண்கள் இம்சிக்கப்படுவது இல்லாமல் போகவில்லை. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்பினர் 17இல் vம் பிரிவில் பெண்களது சுயமுயற்சிகள் நாட்டின் நலன்கருதும் அவர்களது நடவடிக்கைகளிற்கு இடையூறு எதுவும் விதிக்கப்படக்கூடாது என்றும் தண்டனைச் சட்டவாக்கங்களும் தொடர்கின்றது.

ஆனாலும் குடும்ப அந்தஸ்த்தில் இருந்த ரீட்டாமனோகரன் நாட்டின் உயர்வு கருதிய மாணவி போன்றோர் அண்மையில் அத்துமீறல்காரர்களால் கற்பழிக்கப்பட்டது, பெண்குழந்தைகள் களுத்துறை மாவட்டத்தில் பெருமளவு பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டது உண்மை. ஆனால் விடிவெள்ளி போன்று காணப்படும் சத்தியின் வடிவமான பெண் இனமே தங்களைத் தாங்களே காத்துக்கொள்வதற்கு தற்காப்பு நடவடிக்கைகளை அவர்களும், அரசும் உணர்வு பூர்வமாக ஜதார்த்த பூர்வமாகவும் எடுத்து உண்மையிலே பெண்களுக்கு போதிய கல்வி அடிப்படை விதிகள் நிறை வேற்றப்பட வேண்டும். 21ம் நூற்றாண்டில் நாடு, குடும்பம் அடிப்படையில் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றும் பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்றும் கூறுவது தர்க்கரீதியாக கேலியானது, காரணம் பெண்கள் அனை வரும் ஒன்றிணைந்து தங்கள் விடுதலைக்கு உழைக்க வேண்டும் இது விவேகானந்தர் கருத்தும்கூட இந்தக் கருத்தில் நானும் முனைப்புடன் நின்று பெண் பேதையோ, பாவையோ, மடந்தையோ அல்ல பெண் ஞானம் மிகு இச்சா, கிரியா ஞானா சக்தி மிக்கவள்.

அப்படிப்பட்ட பெண்மைமனம் ஒன்றிணைய வேண்டும். ஒத்துழைப்பு வேண்டும். 20ம் நூற்றாண்டில் பெண்ணினத்தின் பங்களிப்பு இவ் உலக ரீதியாக மகத்துவமும், மாண்பும் மிக்கதும் குறிப்பிடத்தக்கதும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பெடரிக் மயூரின் அறிக்கையில் கூறுகின்றார்.

எனவே குடும்பத்தின் அத்திவாரமே நாட்டின் உயர்வு. பெண்மை தாழ்ந்தால் நாட்டின் அபிவிருத்தியும் தாழும் பெண்மையினத்தின் தாழ்வு குடும்ப நாட்டின் அபிவிருத்தியின் தாழ்வு என்பதை இக்கட்டுரையின் மூலம் ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகின்றேன். பெண்களின் மேன்மை உணர்த்துவதற்காக ஆண்டாண்டுதோறும் அவர்களின் நலன்காக்கும் உச்சி மாநாடுகளில் பலதிட்டங்கள் அவர்களிற்காக இயற்றப்பட்டுள்ளது. எம் நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண்ணாக இருப்பதனால் பெண்களை என் சகோதரிகளாகக் கருதுகின்றேன். அவர்களில் விதவைகள் வேறானவர்களல்ல அவர்களனைவரும் நாட்டின் அபிவிருத்தியில் பங்காற்ற பல்வேறு சட்டங்கள் திட்டங்களைக் கொண்டு வந்தது நாமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை வாயிலாக அறிந்ததே.

எனவே வீடு ரீதியாக நோக்கினாலும் சரி நாடு ரீதியாக நோக்கினாலும் சரி பெண்ணினத்தின் பங்களிப்பு விடி வெள்ளியின் பிரகாசத்திலும் மேலானதும் விடிவெள்ளியின் உயரத்தின் உயரமானது மாகும். "பெண்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் உரிமைகளை அவர்கள் சுதந்திரமாக அனுபவிக்கும் போது வீடும் நாடும் மேன்மையுறும் எனும் விவேகானந்தரின் கருத்தை நானும் அறுதியும், உறுதியும் இறுதியுமாகக்கூறி பெண்களின் உயர்மிகு பங்களிப்பினை எவரும் என்றும் மறந்து, விடவோ, மறைத்து விடவோ, மறுத்துவிடவோ முடியாது என்பதை ஆணித்தரமாகவும் அன்பாகவும் கூறிக்கொள்கின்றேன்.

செல்வி. ச. ரூபதர்ஷணி
விஷ்ணு மகா வித்தியாலயம்,
பெரிய நீலாவணை.

# ஏன் பெண்ணென்று பிறந்தாய்

ஓடும் நதியினிலே ஓர் ஓடம்
சிறிதாக இருந்தாலும் சரி
பெரிதாக இருந்தாலும் சரி
அது அசைந்தே செல்லும்

புல்லுக்கும் புயலுக்கும்
இடையே உள்ள உறவு
போன்றதாக உனக்கும்
உனக்குமிடையே நிலவும்
உறவு அமைய வேண்டும்

பெண்ணை ஈன்றோம் என்று
பெருமை கொண்டாள் அன்னை
அன்பான தன்மகளை
ஆசையுடன் வளர்த்தெடுத்தாள்
கன்னியாம் அவளை
கைப்பிடித்துக் கொடுக்க
தேடினாள் சிறந்த
தொரு ஆண்பிள்ளை.
ஆனால்
சீதனத்திற்கு ஆசையுறும்
மாப்பிள்ளையிடம்
கொடுக்க பணமில்லாமல்
சிறையிருக்கும் என்மகளை
எண்ணி கவலையுற்றாள்
அன்னை
ஏன் இவளை ஈன்றோம்
என.

*செல்வி*
*க. வனிதா*
*தலைவர் வீதி,*
*அக்கரைப்பற்று-08*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேற்பிரிவு கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை**

R.K.M. இன் நல்லதோர் காலைப் பொழுதில் நான் இயம்பும் மெல்லியதோர் வந்தனங்கள்.

சொல்லிய மெட்டில் சுவையோடு கவிபாட நான் வந்தேன். நாடும் வீடும் நங்கையர் கையில் என்று பொறுத்திருந்து கேளுங்கள் புலப்படுமே என் கருத்து.

## *நாடும் வீடும் நங்கையர் கையில்*

பாரெங்கும் பள்ளிக் கூடம் – அதில்
பணியாற்றும் நங்கையர் கூட்டம்
கூட்டத்தில் ஒரு தோற்றம் – அது
வீறு நடை போட்டு வாழ்வில்
வெற்றி கொண்டோம் நாமென்று
சொல்லாமல் சொல்கின்ற தோற்றம்

தோற்றங்கள் பொய்க்கவில்லை
தேடிய தேடல்கள் தோற்கவில்லை
விடுதலை கண்டாள் நலம் காக்க
நல்லதோர் விடியலும் கண்டாள்
நாடும் வீடும் நங்கையர் கையில் என்று

நாட்டிலோ நங்கை நல்லதோர் வீணை செய்ய
வீட்டிலோ அவள் பங்கை
நலம் கொண்டு காக்க
நாடும் வீடும் அவள் கையில்
நல்லதோர் ஆட்சி செய்ய – அதில்
வெற்றி கொண்டோம் நாமென்று
வீர நடை போட்டார்கள் இந்த நங்கையர்கள்

அன்றோ!
தடுமாறிய காலத்தில் தவித்தாள் நங்கை
தடுமாற்றத்தால் எத்தனை கண்ணீர் விட்டாள் அவள்



அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் ஓலங்கள் எத்தனை ராகங்கள்
அத்தனையும் நங்கையின் துயர சோகங்கள்
சோகங்கள் மாறவில்லை – அன்று
பாலியல் வேதனைகள் ஓயவில்லை
பெண்மைக்கு எத்தனை கலக்கங்கள்
பெருமை சேர்க்கும் அவள் கற்புக்கு
எத்தனை எத்தனை சோதனைகள்
அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டதால்
வந்த எத்தனை வேதனைகள்
அன்று அவளால் பொறுக்க முடியவில்லை

பொங்கி எழுந்தாள் பெரும் கோசமிட்டாள்
உரிமைகள் கிடைக்க வேண்டுமென்று
போராடினாள் பாரதி கண்ட
புரட்சி பெண்ணானாள் புதுமை பெண்ணானாள்
வெற்றியும் கண்டாள் விடியலில்
நாடும் வீடும் நங்கையர் கையில் என்று

அவள் எண்ணங்கள் பொய்க்கவில்லை
போராட்டங்கள் தோற்கவில்லை
வீட்டுக்குள் அடக்கி ஒடுக்கப்பட்டவள்
வெளி வந்து வெற்றி நடை கண்டாள்
ஆணுக்கு பெண் நிகர் என
அடுப்படி மட்டும் சொந்தமல்ல
பெண்ணுக்கு ஆட்சி செய்யவும் தெரியுமென
சொல்லாமல் செய்து விட்டாள்
தன் ஆற்றலால் உலகத்தை ஆளுகின்றாள்
இப்போது

பாரதி திகைத்து நிற்கின்றான்
தான் படைத்து வைத்த
கற்பனைப் பெண்ணின் வரவு கண்டு
மலைத்து நிற்கின்றான்
வாடி வதங்கி அன்று அடுப்பங்கரை யோரத்தில்
அழுது நின்ற நங்கையர் இவள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாய் தலைவியாய் தன்
கணவனுக்கு மனைவியாய் நாட்டுக்கும்வீட்டுக்கும்
தொழிலாளியாய்
தரத்தில் உயர்ந்து தன்னுரிமை கோரி
தன் நாடு காக்க புறப்பட்ட
நங்கையைக் கண்டு பாரதி திகைத்து நிற்கிறான்

வீட்டிலோ தாயின் இலக்கணம் கொண்டு
தலை நிமிர்ந்து நல்லது, கெட்டது தெரிந்து கொண்டாள்
தன் கணவனை மதித்து ~ அன்போடு
ஆணுக்கு பெண் நிகர் என
சொல்லாமல் சொல்லி விட்டாள்
இப்போது நாடும் வீடும் அவள் கையில்தான்

அற்புத ஆற்றல்களின் தெளிவு
பெண்மை இலக்கணங்களின் சிறப்பு
உலகத்திடம் அவள் கொண்ட மதிப்பு
பெண்மைக்கு சிகரம் படைத்து விட்டாள்
அவளுக்கு நாடும் வீடும் தூசு மாதிரி

நல்லதோர் வீணை செய்து
நலம் காக்க நாடும் வீடும்
நங்கையர் கையில்தான்
இவள் இல்லறம் செழிக்கவே
இயம்புவோம் நாமும்

**இது உங்கள் நூல் சுத்தமாக வைத்திருக்கவும்**

***செல்வன் குமாரலிங்கம் மதிக்குமார்***
***கார்மேல் பாத்திமா கல்லூரி,***
***கல்முனை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய பிரிவு கட்டுரைப்போட்டியில் 1ம் இடம் பெற்ற கட்டுரை

# ஆணுக்கு நிகரான அரிவையர்

மாதராய் இவ்வுலகில் பிறப்பது நாம் செய்த பாக்கியமே என ஒவ்வொரு பெண்ணும் இன்றைய கால கட்டத்தில் எண்ணத்தலைப்பட்டு விட்டனர் என்பது மிகவும் திண்ணமான ஒரு விடயமாகும். அதனால்தான் நான் என்னவோ இருபதாம் நூற்றாண்டிற்கோ ஒரு பெரும் பேறாக எமக்கு வந்துதித்த புலவர்மணி, புரட்சிக் கவிஞர் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் சுப்பிரமணி பாரதியார் "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்து வோம்" என்று கவிபாடி புதுமை படைக்கும் பெண்களாக விட்டுச் சென்றார். எனவே பாரதி காண விரும்பிய புதுமைக்கும் பெண்ணாக எவர்க்கும் தாம் அடிபணிய வேண்டியதில்லை என்ற புரட்சி செய்யும் பெண்களாகவும் இன்றைய அரிவையர் திகழ வேண்டும் என்பதே இன்றைய அவா ஆகும்.

தொன்று தொட்டே ஆண்பலம் மிக்கவன், பெண் மென்மையானவள் என எல்லோர் மனதிலும் வித்திடப்பட்டதால்தான் என்னவோ இன்று பெண்கள் ஆண்களுக்கு பணிந்து தமது உரிமைகளை அவர்களது கையிலேயே கொடுத்து விட எத்தனித்துள்ளனர். அதுமட்டுமா பெண்ணை பண்டைய புலவர்கள் கூட பூவை, பாவை என வர்ணித்துள்ளதால் பெண்ணானவள் எதிலும் தமது திறமைகளை மூடி மறைத்துக்கொண்டு வாழ்கின்றாள். ஆனால் பல்வேறு உரிமைகளையும் இழந்துள்ள சில புரட்சி செய்யும் பெண்மணிகளால் பெண் விடுதலை இயக்கம், பெண்கள் பாடசாலைகள், மகளிர் சம்மேளனங்கள் இன்னும் எத்தனையோ இயக்கங் களை உருவாக்கியுள்ளனர். இவற்றால் பெண்களின் உரிமைகள், அபி லாசைகள் என்பன ஆணுக்கு நிகராக சமுதாயத்தில்செவிமடுக்கப்படுகின்றன. .

அன்று சிலப்பதிகாரத்தின் நாயகியான கண்ணகி கோபம் கொண்டு மதுரை நகரையே தனது சக்தியால் எரித்துவிடவில்லையா? "பெண்ணாலும் முடியும்" என்ற எண்ணம் ஒவ்வோர் பெண்ணின் மனதிலும் ஆழமாய்ப் பதிய வேண்டும். ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என பெண்களைக் கேவலப்படுத்தும் ஆண்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பாடம் புகட்ட வேண்டும். பெண்ணுக்கு எது முடியாது? இன்று இரண்டாயிரம் ஆண்டிற்குள் காலடி எடுத்து வைக்கப்போகும் மக்கள் தொகையில் பெண்களே அதிக தொகையினர் என கணக்கிடப்பட்டுள்ளது. இது பெண்களுக்கு ஒரு பெருமையான விடயமாகும்.

பெண்ணானவள் இன்றைய நவீன உலகின் ஒவ்வோர் செயற் பாடுகளிலும் ஈடுபட்டுள்ளாள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஏன், எமது நாட்டின் ஜனாதிபதியே ஒரு பெண்தானே ஒரு பெண் தனித்து நின்று ஒரு நாட்டையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி செய்யும் போது மற்றப் பெண்களுக்கும் இது ஓர் முன்மாதிரியாகும். மேலும் இந்திய நாட்டுப் பெண்மணியான மேனகா என்பவர் விண்வெளிக்கே சென்று ஆராய்ச்சி செய்ய முனைந்து விட்டது ஆசிய நாட்டவரான நாம் ஆராயத்தக்க ஒரு விடயமே. விஞ்ஞானத் துறைகளில் மட்டுமன்றி கலை, கலாச்சார விடயங்களிலும் ஆண்களை விட பெண்களே முன்னணியில் இருக்கின்றனர். துப்பறியும் துறைகளிலும் ஆணுக்கு நிகராக பெண்ணும் ஈடுபட முனைந்து விட்டாள். ஆனால் இது மேலை நாடுகளிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் கீழைத்தேய நாடுகளிலும் இது நடைமுறைக்கு வருவதற்கு அதிக நாட்களில்லை.

விவாகரத்து எனும் முறையில், பெண்ணானவள் தான் விரும்பாத, தனக்கு ஒத்துவராத கணவனை எதிர்க்க உரிமை பெற்றுள்ளமை பெண்கள் கண்ட பெரும் வெற்றியாகும். அன்றைய காலங்களில் கணவன் இறந்தால் மனைவி தீக்குளிக்கும் முறை காணப்பட்டது. ஆனால் இன்று கணவன் இறந்தால் வேறொருவரை மணக்கும் உரிமையை பெண்கள் பெற்றுள்ளனர். பெண்ணுக்கு கொடுமை விளைவிக்கும் முறைகளை இன்று நாம் காணுவது அரிதாகி விட்டது. சிலர் பெண் குழந்தை பிறந்தால் வெறுப்படைகின்றனர். ஆனால் அக்குழந்தையே பிற்காலத்தில் பெரும் அறிவாளியாக எல்லோருக் கும் உதவக்கூடிய ஒரு பெண்மணியாக திகழப்போவது பெற்றோருக்கு அறிய வாய்ப்பில்லை.

"பெண்" என்று கூறும் போது அச்சொல்லுக்கு எதிரான சொல்லாக நாம் "ஆண்" என்றே கூறுகின்றோம். அப்படி இருக்கும் போது ஆணுக்கு பெண் நிகர் என்ற ஓர் எண்ணமே யாவர் மனதிலும் மின்னல் கீறலாய் வந்து செல்கிறது. இதை எல்லாப் பெண்களும் அறியத்தலைப்பட்டு விட்டனர் என்பது மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு விடயமாகும்.

பெண்ணானவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குணங்களுக்குள் அடங்குபவள், இந்நான்கு மென்மையான உணர்ச்சி பூர்வமான குணங்களுக்கு அப்பாற் செல்லாத வகையில் சகல விடயங் களிலும் ஆணையும் எதிர்த்துப்போராடக் கூடியவாறு ஒவ்வொரு பெண்ணும் இரண்டாயிரம் ஆண்டிற்குள் நுழைந்து செல்வார்களானால் நிச்சயம் பெண்கள் உலகின், நாட்டின், ஊரின் கண்களாக திகழ்வர் என்பது வெள்ளிடையாகும்.

"இவ்வுலகில் நாம் மாதராய்ப் பிறந்தற்கு
நன்றே மாதவம் செய்தல் வேண்டும்"

- வாழ்க மகளிர் ! -

*ஏ. எஸ். றுமைசா பேகம்*
*முஸ்லிம் மகாவித்தியாலயம்,*
*சம்மாந்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய பிரிவு கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை**

# உலகின் கண்களே..... பெண்கள்.

*கண்ணியமாய் நடுவர் போற்றி*
*பணிவுடனே குருக்கள் போற்றி*
*அன்புடனே தோழமை தந்து*
*பெண்கள் உலகின் கண்களே*
*என நான் தரும் கவி கேளும்.*

*பெண்ணின் பெருமை பேசுதற்கு*
*எண்ணியிங்கு சொல்லப்போனால்*
*அளவில்லாத சொற்கள் வேண்டும்*
*அகராதி கூட முடிந்து போகும்*

*கண்ணின் பார்வைக்கு நற்*
*கருமணிகள் முக்கியமா...*
*ஆயின்,*
*இந்தப் பாருலகம் பரிணமிக்க*
*பெண்கள் என்றும் தேவையம்மா*

*விஞ்ஞானம் முளைத்தெழுந்து*
*விருட்சமாக இன்று வளர்ந்து*
*அஞ்ஞானம் கழைந்து, நேராய்*
*நிற்க வைத்தவள் பெண்தான் கேளு*

*பத்து மாதம் எமைச்சுமந்து*
*காணும் துயர் கோடி - அவள்*
*பிள்ளை மீது கொள்ளும் அன்பு*
*கோடிகாலம் வாழும் ஒன்று.*

*சந்திர மண்டலத்தில், கால் பதித்த*
*நீல் - ஆம்ஸ்ரோங் முதல்*
*இந் நித்திலம் கண்ட பல*
*விஞ்ஞானிகள் மட்டுமல்ல*

*உலக வரலாற்றிலே*
*வைரக் கல்லாய் மிளிருகின்ற*
*எத்தனையோ மேதைகளை*
*தந்தது யார்*
*பெண்தான் அன்றோ*

*வைத்தியர்கள், தாதியர்கள்*
*சத்தியங் கொள் உத்தமர்கள்*
*இவர்கள் போலும் இன்னும் பலர்*
*ஈன்று தந்தது யாரென்று கேள்*
*புரியுமுனக்குப் பெண்தானென்று.*

*ஆணொருவன் முன்னேற்றத்தில்*
*பெரும் பங்கு வகிப்பவள் பெண்தானே*
*பெண்துணைதான்இல்லையென்றால்*
*ஆண் வாழ்வில் வெற்றியேது.*

*தாயின், பாதமதன் கீழேதான்*
*சொர்க்கமென்று சொன்னார்*
*மாமேதை முஹம்மதுவும்*

*புரட்சிக் கவி பாரதியும்*
*புதுமைக்கவி படைத்தான்*
*பெண்ணே தெய்வம் என்று*
*எனவே,*
*பெண்ணின் பெருமை*
*உணர வேண்டும்*
*இவ்வையகம் அதனால்*
*உயர வேண்டும்*

*நன்றியுரை கூறி நானும்*
*முடிக்கின்றேன் இக்கவியை*

***அப்துல் காதர் பாத்திமா பர்வின்***
***கமு/ அல்மனார் மத்தியகல்லூரி.***
***179, ஹிஜ்ரா வீதி.***
***மருதமுனை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்ப் பிரிவு கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

## பெருமை பெறும் பெண்கள்

"பெண்களாய்ப் பிறப்பதற்கோ நல்ல மாதவம் செய்திட வேண்டு மம்மா" எனக்கவி பாடிய கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் உணர்ச்சி பூர்வமான கவிதையின் ஆழமான கருத்து வெளிப்பாட்டிலிருந்தே பெண்களின் பெருமை உயர்வாகவும், சிறப்பாகவும், உணர்த்தப்படுகின்றது. மானிடப்பெண் இனிமையா னவள், மென்மையானவள், அழகா னவள், கருணை மிக்கவள், அன்புள்ளம் கொண்டவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் தன்னகத்தே கொண்டவள் என்றெல்லாம் கருதப்படுவதில் ஆச்சரியமில்லை.

அன்றைய பெண்ணினத்தின் நிலை பற்றிக் கண்ணோட்டமிடு கையில் நெஞ்சை நெகிழவைக்கும் சில உண்மைகளை உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்களின் பிறப்பை ஒரு கேடாகக் கருதிய சமுதாய அமைப்புக்கள் காணப்பட்டன. பெண் ஒரு பிள்ளை பெறும் இயந்திரமாக, அடுப்பங்கரை "ரோபோக்களாக" ஆணின் இச்சையைத் தீர்க்கும் போகப் பொருளாக கருதப்பட்டு செயற்படுத்தப்பட்டாள். பெண் குழந்தைகளைக் குழிதோண்டிப் புதைத்த கால மொன்றிருந்தது. கணவன் இறந்தால் மனைவியும் தீக்குளித்து இறக்க வேண்டிய நியதியுமிருந்தது. பொதுவாக நோக்குகையில் பெண்ணின் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு மிகவும் இழிவான பிறவியாக அவள் கருதப்பட்டாள்.

இந்நிலையில் பெண்ணினத்துக்கும் வாழ்வளிக்க வழிவகுத்த மதத் தலைவர்களை உலகை வரலாற்றிலே காண்கின்றோம். சமுதாய சீர்திருத்தச் செம்மல்களைக் காண்கின்றோம். அறிஞர்களை, கவிஞர்களை நாடளாவிய பெருந் தலைவர்களைக் காண்கின்றோம். பெண்களின் விடிவுக்கு வித்திட்ட சமயக் கருத்துக்கள், பெண்களுக்கு இருந்த மூட நம்பிக்கைகள் அகலவும், பெண்களின் நிலையை உயர்த்தவும் வழிவகுத்தன.

பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற அனைத்து சமயங்களும் பெண்ணின் பெருமையை மண்ணுலக மாந்தருக்கு எடுத்து இயம்பின. இப்படியான பல காரணிகளால் காலம்மாற மாதர்குலம் விழிப்புணர்ச்சி பெற்றது. பெண் விடுதலை காண உரிமைகள்பெற இயக்கங்கள், சட்டவாக்கக் கழகங்கள், அரசியல் அமைப்புக்கள், நலன்புரிச் சங்கங்கள் உலகளாவிய ரீதியில் உருவாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆணுக்குப் பெண் சளைத்தவளல்ல" என முழங்கிய புரட்சிக்கவி பாரதி, கூட பாஞ்சாலி சபதம் படைத்து புதுமைப் பெண்ணைக்காண விளைந்தார்.

மானிடப் பிறவியிலே ஆணும் பெண்ணும் சமமானவர்கள் ஆண்கள் பெண்களின் ஆடை, பெண்கள் ஆண்களின் ஆடை என்ற கருத்து வலியுறுத்தப் பட்டமை பெண்களின் ஒளிமயமான எதிர்காலத் துக்கு வித்திட்டது எனலாம். இதனடிப்படையில் இன்று நவீன சமுதாயப் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றம் மனித சமுதாயத்திற்கு பெருமை தேடித் தருகிறது. இதன் காரணமாக சமூக மேம்பாட்டுக்காகவும், குடும்ப நலனுக்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும், சமய வழிபாட்டுக்காகவும் சமய, கலாச்சார பண்பாடுகளை பேணிப்பாதுகாக்கும் பண்பை வளர்க்கக் கூடிய வழிகாட்டியாக, ஆலோசகராக நின்று பணி புரியும் பெண்களால் நிச்சயமாக உலகம் மேலும் சிறப்படையத்தான் போகிறது.

இன்றைய பெண்களிலே நாடளாவிய தலைவர்கள் சட்ட வல்லுநர்கள், மனிதவியல் சமூக பண்பாட்டாளர்கள் விஞ்ஞான மேதைகள் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் என்றெல்லாம் பணி புரியும் நிலை போற்றக்கூடியது. இவர்களிலே சமூக நலன் பணியிலே அன்னை தெரேசா, தாதிச் சேவையை நிலை நாட்டிய "புளோரன்ஸ் நைட்டிங் கேள்" அரசியல் அரங்கிலே முதல் பிரதமர் என்ற வகையில் சிறிமாவோ பண்டார நாயக்க, இந்தியாவுக்கோர் இந்திராகாந்தி, விண் வெளித் துறையிலே வெலண்டினோ, தெரஸ்கோவா போன்ற எண்ணற்ற புகழ் பூத்த மாதர் குல மாணிக்கங்கள் உலகவானிலே புகழ்பெற்று பிரகாசிப்பதைக் காண்கின்றோம். "வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மானிடர் தலை குனிந்தார்" எனக் கவிபாடிய பாரதியின் கனவை நனவாக்கியது போல சமய துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

மண்ணிலே மாதராய்ப் பிறப்பதும் மாண்பு

மானிடர் சமூகம் மாதரால் சிறப்பதும் மாண்பு

உலகமே மாதரால் உயர்வதும் மாண்பு

**இ. கன்சுல் இக்றாமா**

**மத்திய மகா வித்தியாலயம்,**

**சம்மாந்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்ப் பிரிவு கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை

# பெண்ணின் நிலை

பெண்ணினம் பெருக வேண்டும்
பெரிதாகப் பேசிக் கொள்வீர்

மண் மனை காவல் நாயாய்
மனிதர்களால் வீட்டில் பூட்டி
அடக்கி வைக்கப்படும்
பெண்களும் உண்டல்லவோ

சீதனம் எனும் சாதனத்தால்
சீரான வாழ்க்கையதை
வீணாக பாழாக்கி
வீம்புகள் பல செய்து
நாட்டை விட்டே வேலைக்கு
துரத்தவும் படுகின்றனரே

கருவாகும் பெண்மையது
உருவாகும் போதினிலே
கெட்ட வார்த்தைகளால்
பூப்போன்ற
மனதினாலே தாக்கப்படுகின்ற
அவலங்கள் காண்பீரோ

சமுதாயம் என்கின்ற
கடை வீதி தன்னிலே
சாந்தி இன்றி
தினம் தினம் மனதாலே
வெம்புகின்ற பெண்களுக்கோர்
உதயம் ஒன்று
என்று ஏற்படுமோ

அச்சம் மடம் நாணம் இதை
காரணமாய் காட்டி இன்று
சமுதாயம் தனிலே
தூற்றப்படும் பெண்கள்
தூக்கமின்றி அலையும்
அவலம் அறிவீரோ

பெண்பிள்ளை என்றாலோ
மனிதர்கள் முகம் சுளிக்க
எதுவுமே அறியாத
அப்பிள்ளை சிரித்து விட
பெண்ணினமோ விதியை எண்ணி
வருந்துவது ஏனையா?

கூனாய் இருந்தாலும்
குருடாய் இருந்தாலும்
மணாளன் துணை
தேவையென்றால்
காரும் பணமும் காணியை
கடல் போல் விடும் அல்லவா வேண்டும்

நிலவு போன்ற பெண்ணுக்கு
மார்க்கப்பற்றும் அறிவும் ஆற்றலும்
இருந்தும் கூட என்ன பயன்
ஈனமற்ற இவ்வுலகில்

பெண்ணுக்கும் உரிமையுண்டு
என போர்க்கொடி உயர்த்திய
பாரதியின் நினைவு எங்கே
பயனற்ற இவ்வுலகில்

பூப்போன்ற பெண்களையே
கண்ணான கலைகளையும்
கற்காமல் தடை விதிக்கும்
தறுக்குச் சட்டம் குற்றமாகும்

ஹ. மு. தஸ்னீம்
இலக்கம் - 21
முஸ்லிம் தேசிய பாடசாலை
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களும் சமத்துவமும்

அக்காலப் பெண்களின் தன்மை வித்தியாசமானது கற்புக்கரசிகளாக இருந்தவர்களையும் நாம் அறிவோம். பெண்களுக்குச் சம உரிமை கிடைப்பதே அரிதாக இருந்தது. பெண்கள் அடிமைகளாகவே பாவிக்கப்பட்டார்கள். பெண்கள் அடக்கி ஒடுக்கிக் கட்டுப் பெட்டிகளாகவே வாழ்ந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் பாரதி கண்ட புதுமைப் பெண்களாக வீறு கொண்டு எழுந்தனர். அதன் விளைவு அடிமைகளாய் வாழ்ந்தது போதும் எமக்கும் சம அந்தஸ்து (உரிமை) வேண்டுமென்று புறப்பட்டனர். ஆனாலும் தொண்ணூறு வீதமானவர் இந்நிலைக்கு வந்துவிட்டனர். ஒரு சிலர் மாத்திரம் பழமை நிலையிலேயே வெந்து கொண்டிருக்கின்றனர். தற்காலப் பெண்கள் வரிசையில் இந்நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண். பிரமதர் ஒரு பெண் எல்லாத் தொழில் துறைகளிலும் முதல் இடம் பிடித்துள்ளவர்கள் பெண்களே.

ஆண்களோடு சரிநிகர் சமமாக நின்று உரிமை கோருகின்றனர். ஒரு சிலரது வாழ்க்கை மட்டும் அடிமைகளாக வாழ்வதிலும் தகாத செயல்களினால் வஞ்சிக்கப்பட்டும் அடங்கி, ஒடுங்கி நிற்கின்றனர். முழுமையாக பெண்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை எனலாம். கல்வியிலே குறைந்து, அறிவு குறைந்து இருந்த காலம் அந்தக் காலம், அறிவுத் தூண்களாக அடியெடுத்து வைத்தது இக்காலம் ஒவ்வொரு துறையிலும் சலிக்காமல் சமமாக தங்கள் திறமையினை வெளிப்படுத்தி விட்டனர்.

இங்கிலாந்தின் மகாராணிகளாக மார்கிறட் தட்சர், எலிசபெத் போன்றவர் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். இதனை எண்ணிப் பெருமை கொள்ளத்தான் வேண்டும். வீரமங்கை என்ற பெயரைப் பெற்று வீரதீரச் செயல்களைப் புரிந்தவர் ஜான்சி ராணி. இவர் ஏட்டிலும் இடம் பெற்ற ஓர் வீராங்கனை. அவரது வீரம் நமக்கெல்லாம் தைரியத்தையும் வல்லமையையும் தந்தது என்றே சொல்லலாம்.

ஒரு சிலர் பழமையை விட்டும் புதுமைப் பெண்களாக மாற நினைத்தாலும் முடியாமல் திண்டாடுகின்றார்கள். கணவன் பிள்ளைகள் என்று வரும் போது சில பிரச்சினைகள் ஏற்படுவதைக்காணலாம். ஒரு பெண் தெருவில் சுதந்திரமாக நடப்பது என்பது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமாகாது. ஆணும், பெண்ணும் அந்நியோனியமாகப் பழகுவதை இந்தச் சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல் இல்லை. இதனால் ஒரு சிலரது வாழ்வில் புயல் வீச ஆரம்பித்து விடுகின்றது. தொழில் ஸ்தாபனங்களில் நல்ல நண்பர்களாக, சகோதர பனப்பாங்குடன் சமமாகப் பழகுகின்றவர்களின் எண்ணங்கள் சிந்தனையில் இருந்தாலும் ஓரிருவர் பார்வையில் சந்தேகக் குறிகள் எழத்தான் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சந்தேகம் வலுப்பெற்று நல்லவர்களுக்குப் பிரச்சினையாக அமைந்து விடுகின்றது. தொல்லைகளும், கவலைகளும் மனதைக் குடைந்து கொண்டிருக்கும்.

தாயை எவரும் தாரமாக மனத்தால் கூட நினைப்பதில்லை. அவள் அங்கே உயர்ந்து நிற்பவள். மற்றது தாரம் என்றால் அடிமையில்லை. அவளும் ஒரு பெண். இரவுபகலாக கடமை செய்பவள் அவள் பாவம் என்று ஆண்கள் நினைப்பதில்லை. அவளுக்கு ஓய்வு தேவை என்று நினைக்க மறந்து விடுகின்றனர். இப்படிப்பட்ட பெண்கள் சமத்துவம் பற்றிப்பேச முடியாது. அடுத்தது சகோதரி (உடன்பிறப்பு)க்கு ஒரு அபகீர்த்தி ஏற்பட்டுவிட்டால் உடனே கர்ச்சித்தபடி பாய்ந்து சென்று காப்பாற்றி விடுவர். ஆனால் அதே போன்று அழகிய பெண் ஒருத்தி தனித்துச் செல்லும் போது மட்டும் "ஹலோ மிஸ் எங்கே போறீங்க" "சம்மதமா நான் உங்கள் கூட வரச் சம்மதமா" பாட்டுக்கள் தூள் பறக்கும் அப்பெண் தைரியமாக இரண்டு வார்த்தை சொல்லிவிட்டால் மறுநாள் காத்திருந்து பலவந்தப் படுத்தி தகாத செயல்களினால் தலை குனிய வைத்து விடுவர். இதுபோன்ற சம்பவங்களினால் சமத்துவம் பெற்று விட்டோம் என்று சொல்ல இயலாது. ஓரிருவரின் இச் செயல்களினால் ஆண் வர்க்கத்தைக் குறை சொல்ல இயலாது.

ஆண், பெண் என்ற கோட்பாடு தன்மைகளுக்கேற்ப சரிநிகர் சமமாக வாழ்வதில் என்றும் சந்தோஷமே பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும். பெண்ணுக்குச் சமமான உரிமைகள் வழங்கப்பட்டு வாழவேண்டும். உலகமே பெண்கள் மயமானது. இந்திரா காந்தி, சோனியா காந்தி, ஜெயலலிதா போன்றவர்களும் பெண்கள்தான் என்பது யாவரும் அறிந்ததே. இன்றைய சூழ்நிலையில் பெண்ணுக்குச் சமஉரிமை நூற்றுக்கு நூறு கிடைத்துள்ளது என்று சொல்லிவிட முடியாது ஆண்களை விட ஒருபடி செயல்திறன் தைரியம், பொறுமை அனைத்தும் பெண்களுக்கு இருப்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இன்றைய பெண்களின் 75% முன்னணியில் இருப்பதையும் அவர்களுக்கு சமத்துவம் வழங்கியமையால் நாடே புகழும் அளவிற்கும் கொடி கட்டிப் பறக்கும் அளவிற்கும் பெண்கள் முன்னேறி உள்ளனர். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்று பாரதி சொன்ன வாக்கு இன்று பலித்ததையிட்டு பெண்கள் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். பெண்கள் வீறு நடைபோட்டு வெற்றியுடன் செயற்பட்டு சமத்துவத்தை முழுமையாகப் பெற்று வெற்றியினைக் காண்போமே. பாரதி கண்ட பெண்ணினமே "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" சமத்துவம் ஓங்கட்டுமே.

***செல்வி. ரஞ்சிதமலர் குகதாசன்***
***2சீ. நற்பிட்டிமுனை, கல்முனை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்று
நாங்கள்
சுதந்திரவானில் பறந்த
சுதந்திரப்பறவைகள்
இன்று
பயங்கரப் புயலால்
பாதை மாற்றப்பட்டோம்
தமிழிச்சியாகப்பிறந்தமையே
தண்டனைக் குரிய குற்றமாம்
வல்லுறவுறக் கழுகுகளிடம்
வசமாக மாட்டிக் கொண்டோம்
காவல் எனும் போர்வையில்
காம இச்சை தீர்க்கும் கழுகுகள்
உடலை ருசிக்க துடிப்பவர்கள்
உணர்வை மிதிக்கின்றார்கள்
சிறையில் வைத்து
சித்திர வதைப்படுத்துகிறார்.

இலக்கியங்களிலாவது
இலட்சிய நாயகர்கள்
பெண்களின் துயர்தீர்த்து
பெருமை சேர்த்தனர்!!

பாரதத்தில்
பாஞ்சாலிக்காக கண்ணன்
இராமாயணத்தில்
சீதைக்காக அனுமன்

எங்களைச் சிறைமீட்க
எவரும் வரமாட்டார்கள்
உதவி செய்ய வந்து
உயிரை விடுவார்களா?
கிருசாந்தி கதையை
கேள்விப்பட்டிருப்பார்கள்

நானும் போராடப் போகின்றேன்
எனது கையில் ஆயுதமில்லை
கையில் நகங்களும்
வாயில் பற்களும்
இருக்கின்றன.

***தம்பிலுவில் ஜெகா***

## ஆவி பேசினால்

அன்பின் நண்பா,
நாம் ஒருவரையொருவர்
அறியோம் முன்பு
அன்றுதான் நண்பரானோம்
அம்மதுக்கடையில்
நம்மனைவி மக்கள்
உண்ண உணவின்றி
அணிய ஆடையின்றி
கண்ணீர் சிந்த
நாம் தினமும்
மதுமயக்கத்திலிருந்தோம்
அப்போது நான் நினைக்கவில்லை
இவ்வளவு விரைவில்
நாம் இருவரும்
அருகருகே சமாதியில்
இருப்போம் என்று

**செல்வி**
**கனகசபை வனிதா**
**தலைவர் வீதி,**
**அக்கரைப்பற்று -07**

உனக்குப் பிடிக்காத கருத்தாக
இருந்தாலும் மற்றவர்கள்
சொல்லுக்குக் காது கொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபலைப் பெண்

கிழக்கு மாகாணத்தின் அழகிய வயல் வெளிகள் நிறைந்த கிராமமது அந்தக் கிராமத்தின் மத்தியில் செல்வ செழிப்புடன் பிரகாசித்துக் கொண்டிருந்த வீட்டில் தான் லச்சுமியும் அவளுடைய மகன் ராஜாவும் வாழ்கின்றனர்.

அன்று திங்கட்கிழமை பிரதாபுக்கு பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா மகன் பட்டம் பெறுவதை பார்க்கச் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த லச்சுமி திடீரென ஏதோ ஒரு யோசனைவர தனது பீரோவைத் திறந்தாள். அதனுள் இருந்த தனது கணவனுடைய புகைப்படத்தை எடுத்துப் பார்த்தவளுக்கு தன்னுடைய கடந்த கால வாழ்க்கை நினைவுகள் கண் எதிரே தோன்றியது.

ஏழைக்குடும்பத்தில் பிறந்த லச்சுமி பார்ப்போர் மனதைக் கவரும் பேரழகியாகக் காணப்பட்டாள். நோய்வாய்ப்பட்ட பெற்றோரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவளுக்கிருந்தது. அதனால் தனது கல்வியைப் பாதியில் நிறுத்தி விட்டு அவ்வூரிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தாள். அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தன் பெற்றோரைக் காப்பாற்றி வந்தாள். காலங்கள் சில கழிந்தன அத் தொழிற்சாலை அதிபரின் மகன்தான் சிவா. அவன் அடிக்கடி அங்கு வருவதும் அவளை பின் தொடர்வதுமாக இருந்தான் இதனை வெறுத்த லச்சுமி சிவாவின் தந்தைக்கு இவ்விடயத்தை வெளிபடுத்தினாள். ஆத்திரமடைந்த தொழிலதிபர் சிவாவை அழைத்துக் கண்டித்தார். எதிலும் பிடிவாதக் குணமுடைய சிவா திருமணம் முடித்தால் லச்சுமியைத்தான் முடிப்பேன் இல்லன்னா இவ்வுலகத்திலேயே இருக்கமாட்டேன் என உறுதியாகக் கூறிவிட்டான்.

சிவாவின் பெற்றோருக்கு விருப்பமில்லையாயினும் சிவாவின் வற்புறுத்தலுக்காக லச்சுமியை அவளுடைய பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் முடித்துவைத்தனர்.

லச்சுமியின் இல்லற வாழ்வு இனிதாக ஆரம்பமானது. நாட்கள் நகர நகர மாமியார் தனது சுய ரூபத்தைக் காட்ட ஆரம்பித்தாள் லச்சுமியை வேண்டா வெறுப்பாக மருமகளாக ஏற்றுக்கொண்ட ராஜம்மாள் மருமகளின் சிறுசிறு தவறுகளைப் பெரிது படுத்தி கொடுமைப்படுத்த ஆரம்பித்தாள் லச்சுமி, அவ்வீட்டில் மருமகளாக காலடி எடுத்து வைத்த நாள் முதல் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களையெல்லாம் வேலையிலிருந்து நிறுத்தி விட்டாள்.

ராஜம்மாள்; மகன் அலுவலகத்திற்க்கு சென்ற பின் லச்சுமியிடம் அழுக்குத் துணிமுதல் சட்டிபானை சுத்தம் செய்வதுவரை அவளின் தலையிலேயே கட்டிவிட்டாள். வேலைகள் கொஞ்சம் தாமதமானாலும் அதனை காரணம் காட்டி அடித்து துன்பப்படுத்தினாள். எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்தன் கணவனுக்குக் காட்டிக் கொள்வதில்லை.

மாமியாரின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் தாங்கமுடியாத லச்சுமி ஒரு முறை மாமியாரை எதிர்த்து "உங்கட வீட்டுக்கு மருமகளாக வரவேணுமென நான் ஒரு நாளும் தவம் கிடக்கல" எனக் கூறிவிட்டாள். ஆத்திரமடைந்த "ராஜம்மாள் ஏழை நாய்க்கு திமிறைப் பாரு" எனச் சொல்லிக் கொண்டு கொதி நீரை அவளை நோக்கி வீசினாள்.

ராஜம்மாள் வீட்டிற்கு வந்த மகனிடம் மருமகள் கதைத்ததை மிகைப்படுத்திக்கூறி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாள். இதனால் ஆத்திரமடைந்த சிவா மனைவியை அழைத்து விசாரித்தான் எதுவும் பேசாமல் நின்ற லச்சுமியை பார்த்ததும் அவனுக்கு ஆத்திரம் அதிகமாகியது அவள் மௌனமாக நின்றதால் அவள் மேல்தான் தவறென நினைத்து அவளை அடித்தான். அவனின் செயல் ராஜம்மாளின் திட்டத்திற்கு சாதகமாகிவிட்டது தொடர்ந்து வந்த நாட்களில் ராஜம்மாள் லச்சுமியைப் பற்றிக் குற்றம் சொல்வதும் அதற்கு அவன் அவளை துன்புறுத்துவதுமாக நாட்கள் கடந்தன. இதற்கு இடையில் லச்சுமி இரண்டு மாதம் கர்ப்ப முற்றிருந்தாள். மாமியாரின் கொடுமை உச்சக்கட்டத்தை அடைந்தது அவளை அறையில் பூட்டி தீவைப்பதற்கு திட்டமிட்டாள். அதனை எவ்வாறோ அறிந்துகொண்ட லச்சுமி தன்னை தனது வயிற்றில் வளரும் குழந்தையையும் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த வீட்டிலிருந்து தப்பித்துச் சென்றாள். இதனால் ராஜம்மாள் தனது குற்றத்தை மறைப்பதற்காக லச்சுமி நடத்தை கெட்டவள் என வீண்பழி சுமத்தினாள்.

அனாதரவான லச்சுமி தனது வயிற்றுப் பிழைப்புக்காக பக்கத்தூருக் குச் சென்றாள். அங்கு வீடு வீடாகச் சென்று பாத்திரம் தேய்த்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன்னைக் காப்பாற்றி வந்தாள். சில இடங்களில் வீட்டு எஜமானர்கள் ஏற்கனவே உள்ள அவப் பெயரை காரணமாக வைத்து அவளை தவறான வழிக்கு அழைத்தனர். இதனிடையே அவளுக்கு ஆண்குழந்தை ஒன்று பிறக்கிறது குழந்தையுடன் வீடு வீடாகச் சென்று வேலை செய்வது கஷ்ரம். ஆகையால் ஏதாவது சுய தொழில் செய்ய வேண்டும் என எண்ணினாள் தனது சேமிப்பில் இருந்த சிறு தொகைப் பணத்தினை முதலீடாகக் கொண்டு கைத்தொழிலொன்றை ஆரம்பித்தாள்.

அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தனது மகனை வளர்த்து படிப்பித்தாள். ராஜாவும் தன் தாய்க்கு பக்கபலமாக இருந்தது மட்டுமல்லாமல் படிப்பிலும் கூடிய கவனம் செலுத்தினான். லச்சுமி மகனின் உதவியினால் தொழிலை விரிவுபடுத்திக் கொண்டு சென்றாள். இன்று சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறாள். தான் ஆரம்பகாலத்தில் செய்த கூலித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலை ஞாபகமாக வைத்து ஆடைத் தொழிற்சாலை யொன்றை ஆரம்பித்தாள். அதன் மூலம் நூற்றுக் கணக்கான ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்தாள் அம்மா என்ற குரல் கேட்டுத் தான் லச்சுமி தனது கடந்தகால நினைவுகளில் இருந்து மீண்டாள். ராஜாவுக்குப் பட்டமளிப்பு விழா நடைபெறுவதைக் கண்ட லச்சுமியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிகிறது.

சமூகத்தில் எத்தனையோ பெண்கள் வாழ்க்கையில் துன்பங்களையும் அவப் பெயர்களையும் சுமந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் தற்கொலை முயற்சிதான் கடைசியில் அவர்களுக்கு கைகொடுக்கின்றது எவ்வளவு துன்பங்களும் துயரங்களும் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் எதிர் கொண்டு மனதில் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் இந்த லச்சுமியைப் போல வாழ்க்கையில் முன்னேற திடசந்தர்ப்பம் பூணவேண்டும்.

தலைவி
முனிறா ஹச்சுமுகம்மட்
மருதமுனை பெண்கள் அபிவருத்தி சங்கம்

*ஏட்டிலே எழுதப்படும் நல்லவை அனைத்தையும்*
*மனிதன்*
*பின்பற்ற நினைத்தால் ஒரு வரியைக்கூட*
*அழியவிடமாட்டான்*

*மற்றவர்களின் பொருளைத் திருடினால்*
*மட்டும் தான் திருட்டு என்று நினைப்பது*
*தவறு மற்றவர்களின் சுதந்திரத்தை*
*திருடினாலும் திருட்டுத்தான்*

*நீ*
*உன் காலடி ஒவ்வொன்றையும் கவனத்துடன் எடுத்து*
*வைப்பது போல உன் எண்ணம் ஒவ்வொன்றையும்*
*நீ*
*எடுத்து வைத்தால் நீ வழுக்கி விழமாட்டாய்*



13935
REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபலைப் பெண்கள் துயர் களைவோம்.

முல்லையரும்பின் ஒளிக்கீற்றாய்
முகிழ்க்கும் மலரின் நறுஞ்சாறாய்
கிள்ளை மொழியின் மென்குரலை
கேட்டே நானும் திரும்பிவிட்டேன்.
சொல்லும் வகையாய் அமைய வில்லை
சொர்க்கத் தங்கம் அவளுடலும்
வெல்லும் வேலும் அவளுடைய
விழியின் வீச்சைத் தானதே

நிலவின் அழகும் கலங்கத்தால்
நிரம்பா குறையாய்த் தோன்றல்·போல
மலரின் இதழ்கள் புயலாலே
மாய்ந்தே சிதைந்து போதல் போல்
புலரும் காலைப் பொழுதினிலே
பொருந்தா ஓலம் கேட்டாற்போல
இலகும் இன்ப யாழ் தொனியும்
இரண்டாய் போன நரம்பாலே

பன்னெலி மாறி இசைத்தல் போல்
பாவையவளின் மெல்லுடலின்
மண்ணாய் போன சாத்திரத்தின்
மாண்பு மிகுந்த பரிசான
வெண்மை வண்ண உடையொன்று
வெந்தழல் போல இருந்ததுவே
புன்மை மிகுந்த சமுதாயம்
பொட்டை யழித்துச் சிரித்ததுவே.

கன்னிப் பருவம் வந்திடவே
காதல் வாழ்வு பெற வேண்டி
அன்பையுடைய பெற்றவர்கள்
அழைத்து வைத்தார் மணனாளை
அன்பர் வந்து கரம்பிடித்து
அமர்ந்த பலரை சுற்றிவந்தார்
என்பு நோயைப் பெற்றமையால்
இறைவனடியைச் சேர்ந்து விட்டார்



REFERENCE SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவா உனக்கிது சகிக்கலையா
எங்கள் கொழுந்தை பறித்தாயே
மறைகள் பலவும் பார்த்துத்தான்
மணநாள் தனையும் குறித்திட்டோம்
கறையாய் அவளை காயாக்கி
கனியா நிலையும் சேர்த்தாயே
முறையாய் சடங்கு செய்திருந்தும்
மொட்டு மலரு நிலையினிலே...

வெட்டி யதனைப் பிரிப்பது போல்
வேலைப் பாய்ச் நெஞ்சினையே
வாட்டி வதைத்து விட்டாயே
வருந்தி நொந்த பெற்றோரின்
வாட்டம் நீங்கித் குறைதீர
நாட்டம் கொண்டோர் வரவில்லை
நலியும் நங்கை வாழ்வு பெற

நல்ல சடங்கும் உதவவில்லை
நாளும் மாறி நாமாறி
இல்லம் மாறி இகமாறி
இருக்கு மிடங்கள் பலமாறி
உள்ளம் மாறா நிலையுள்ளதால்
உடைந்த குங்குமச் சிமிழான
கள்ளம் அறியாக் கைம் பெண்ணின்
கண்ணீர் நீங்கும் நிலையிலையோ

அணிலே சுவைத்த கனியெனினும்
அதனின் சுவையும் குறையாதே
கனிவாய் பெற்ற பெண்ணாளோ
கணவன் அணைப்பை அறியாதாள்
நனிமிகு கற்றும் என்ன பயன்
நங்கையர் விழி நீர் துடைக்காமல்
அணியாய் இன்றே கிளம்பிடுவீர்
அபலைப் பெண்கள் துயர்களைவோம்

**சம்மாந்துறை பரீதா இஸ்மாயீல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு

எங்கள்....
அழுகையின் சத்தம்
உதடுகளில் சிரிப்பாய்
உறைந்து கிடக்க
எங்கள்....
ஆத்மா நெருப்பில்
எரிந்துகொண்டே....

அன்று....
எங்கள் உணர்வுகள்
போர்க் கொடி தூக்கியது
சத்தம் போட்டுச் சென்றோம்
யுத்தத்தில் எம் உடல்
மௌனமாய்
செத்துக்கிடந்தது

எம்பின்னால்
மழைக் காடே உள்ளது.
இதுவரை....
எம் கண்கள்
தூறலைக் கூட
சந்திக்கவேயில்லை.

பலப் பல வருடம்
வெயிலில் வாடியதற்கு
அறுந்த செருப்பும்
கிழிந்த குடையும்
வந்தவர்கள் தந்தார்கள்.

இதயத்தின் ஓலத்தில்
காதுகள் செவிடான பின்
மேளத்தின் ஒலியும்
தாளத்தின் லயமும்
சுகமா என
எம்மைக்கேட்டீர்கள்.

இது வரை...
வெட்கக் கேடான
விடியல் ஒன்றுக்காய்
தவம் பல கிடந்து
முழு நிலவுக்கு
பகையாகி விட்டோம்.

மின் மினிப் பூச்சிகள்
மாநாட்டில்
சூரியக் கதிருக்கு
கண்டனக் கடிதம்
எழுதிய காலம்
இனிப் போதும்

இன்று...
எங்கள்
இருப்பும் வாழ்வும்
என்றும் எமக்காய்
இருப்பதாகவே
உணர்ந்து கொண்டோம்.

இனி...
எம் பாதம்,
ஆழப் பதியும்...

மண்ணும் மலையும்
புயலும் கடந்தே

சுதந்திரப் பெண்ணாய்
சரித்திர ஏடுகளில்....

*விஜயலட்சுமி சேகர்*
*சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்*
*மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாரை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிருவாக உறுப்பினர்கள்

**தலைவி**

திருமதி. இந்திராணி மகாலிங்கம்

**செயலாளர்**

திருமதி. தில்லையம்மா குமாரசூரியம்

**பொருளாளர்**

செல்வி. ஆறுமுகம் மகேஸ்வரி

**வெளிக்கள ஊழியர்கள்**

செல்வி. தியாகராஜா நிலாத்துரி
செல்வி. தம்பியப்பா நளினாதேவி

**உபதலைவி**

திருமதி சுந்தரலிங்கம் உதயகுமாரி

உபசெயலாளர்
செல்வி நாகமணி கிருஷ்ணகுமாரி

மாவட்ட இணைப்பாளர்
திருமதி தக்வா இஸ்மாயில்

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாரை மாவட்ட பெண்களில் துறை சார்ந்த ரீதியாக கௌரவிக்கப்படுவோருடைய விபரம்

**சிறந்த பெண் தலைவிகள்**

திருமதி. உதயகுமாரி சுந்தரலிங்கம்
" வனிதாதேவி மோகனசிங்கம்
" கோமளேஸ்வரி சிவராசா
" உதயதேவி யோகராஜா
செல்வி மேகராஜா ராஜசிறீ
திருமதி. கிருஸ்ணபிள்ளை தேவகி
" கதீஜா அலியார்
" மீரா முகைதீன் ஜுனைதா
செல்வி பதுர்தீன் நூருள் ஹிதாயா
செல்வி எச். எம். சித்தி முனீறா.

**எமது அமைப்பில் சிறந்த கவிதை எழுதும் ஆற்றல் பெற்றோர்**

திருமதி நந்தினி வரதராஜ்
செல்வி சின்னத்தம்பி ரஞ்சினி
செல்வி கணபதிப்பிள்ளை மாலதி
செல்வி ஞானமுத்து யோகேஸ்வரி
செல்வி இஸ்மாயில் சபீனா பேகம்

**சிறந்த எழுத்தாளர்கள்**

திருமதி ஜெதீஸ்வரி நாதன்
" யோகபாக்கியம் யோகேந்திரன்
" பரீதா இஸ்மாயில்
" எம். ஐ. ஹபீலா
செல்வி குகதாஸன் ரஞ்சிதமலர்

பிரதேச பொது நூலகம்
பொத்துவில் - பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்கை மூலிகை மருத்துவத்தில் சிறந்தவர்**

திருமதி. அருளம்மா சுப்பையா

" யாசோதா நாகமணி

**சிறந்த நாடக எழுத்தாளர்**

திருமதி சிவகாமிதேவி முருகமூர்த்தி

**அரசியல் துறையில் சிறந்த பெண்**

திருமதி அன்னம்மா சௌந்தரராஜன்

**சிறந்த சிற்ப கலைஞர்**

திருமதி கமலாவதி அருந்தவராஜா

**சிறந்த கணக்காளர்**

செல்வி ஆறுமுகம் மகேஸ்வரி

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகளிர் தின விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்**

## கட்டுரைப்போட்டி

**கீழ் பிரிவு**

1ம் இடம் முு. இ. கன்சுல் இக்றாமா
சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

2ம் இடம் எம். ஜே. எப். சுப்னா
அல்மனார் மத்திய கல்லூரி,
மருதமுனை.

3ம் இடம் ஏ. கே. றிசாட்,
ஜீ. எம். பீ, வித்தியாலயம்,
அக்கரைப்பற்று.

**மத்திய பிரிவு**

1ம் இடம் ஏ. எஸ். றுமைசா பேகம்
சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

2ம் இடம் எம். ஐ. அர்சாட்
ஜீ. எம். பீ. வித்தியாலயம்,
அக்கரைப்பற்று.

3ம் இடம் கோ. புவனேந்திரன்
மெதடிஸ்த தமிழ் மகாவித்தியாலயம்,
பொத்துவில்.

**மேல் பிரிவு**

1ம் இடம் ச. ரூபதர்ஷணி
விஷ்ணு மகா வித்தியாலயம்,
பெரிய நீலாவனை.

2ம் இடம் ஏ. டபிள்யு. ஹஸ்மத்துல்லா
சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்
சம்மாந்துறை.

3ம் இடம் தனபாலரெட்ணம் பிரபாகர்
கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுப்போட்டி

**மேற்பிரிவு**

1ம் இடம் எம். பி. சாபிறா பர்வின்
சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலயம்,
சம்மாந்துறை.

2ம் இடம் நூபியா சாஹுல் ஹமீட்
கமு/ அல்மனார் மத்திய கல்லூரி,
மருதமுனை.

3ம் இடம் அப்துல் கபூர் முகம்மது றிசாத்
கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.

REFER... ...ECTION
உசா... ...ப் பிரிவு

**மத்திய பிரிவு**

1ம் இடம் எம். எம். இம்திஸா
அல்மனார் மத்திய கல்லூரி,
மருதமுனை.

2ம் இடம் வ. தேவானந்தி
சரஸ்வதி வித்தியாலயம்,
தம்பிலுவில்.

3ம் இடம் செல்வன் வே. வாமதேவன்
கமு/ ஸ்ரீ இராம கிருஷ்ணா தேசிய கல்லூரி,
அக்கரைப்பற்று.

**கீழ் பிரிவு**

1ம் இடம் செ. ரூபசுலோஜனா
ஹோலி குரோஸ் வித்தியாலயம்,
சொறிக்கல்முனை.

2ம் இடம் அ. ஜலஜா
சரஸ்வதி வித்தியாலயம்,
தம்பிலுவில்.

3. எம். ஜே. எம். சுப்னா
கமு/ அல்மனார் மத்திய கல்லூரி,
மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரப்போட்டி

**மேற்பிரிவு**

1ம் இடம் செல்வன். வீ. உருத்திரகுமார்
கமு/ ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி,
அக்கரைப்பற்று.

2ம் இடம் செல்வி. ஞா. ஞானரேகா
கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.

3ம் இடம் செல்வன். ஏ. எம். கிதாபி
கமு/ அல்மனர் மத்திய கல்லூரி,
மருதமுனை.

REFERENCE SECTION

**மத்திய பிரிவு**

1ம் இடம் செல்வன். கோ. ஸாருலதன்
கமு/ ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி,
அக்கரைப்பற்று.

2ம் இடம் செல்வன். கே. சுபாஸ்
மெதடிஸ்த தமிழ் மகாவித்தியாலயம்,
பொத்துவில்.

2ம் இடம் செல்வன் சு. கேசாந்
கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.

**கீழ் பிரிவு**

1ம் இடம் செல்வன். பா. பிரேம்காந்
கமு/ சரஸ்வதி வித்தியாலயம்,
தம்பிலுவில்

2ம் இடம் செல்வன். எம். எச். ஏ. சக்கீ
கமு. ஜீ. பீ. ஜயா வித்தியாலயம்,
அக்கரைப்பற்று.

3ம் இடம் செல்வி. எம். எம். தஸ்பீஹா
கமு/ அல்மனார் மத்திய கல்லூரி
மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப்போட்டி

### கீழ் பிரிவு

1ம் இடம் செல்வி. எச். எம். தஸ்லீம்
சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

### மத்திய பிரிவு

1ம் இடம் செல்வி ஏ. சீ. எப். பர்வின்
அல்மானார் மத்திய கல்லூரி,
மருதமுனை.

2ம் இடம் செல்வி. வீ. பிறிஞ்சிடயனா
ஹோலி குரோஸ் வித்தியாலயம்,
சொறிக்கல்முனை.

2ம் இடம் செல்வன். லெ. நிரஞ்சன் குமார்
மெதடிஸ்த தமிழ் மகாவித்தியாலயம்,
பொத்துவில்.

### மேல் பிரிவு

1ம் இடம் செல்வன். குமாரலிங்கம் மதிக்குமார்
கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.

2ம் இடம் செல்வி. எம். ஜே. சுல்பிகா
அல்மனார் மத்திய கல்லூரி,
மருதமுனை.

3ம் இடம் செல்வி. சதாசிவம் ரூபதர்ஷணி
விஷ்ணு மகா வித்தியாலயம்,
பெரிய நீலாவனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்கள் அபிவிருத்தி நிறுவன
ஸ்தாபகர் மங்கள விளக்கேற்றல்



பெண்கள் அபிவிருத்தி நிறுவன
இணைப்பாளர் மங்கள விளக்கேற்றல்




CIDA வின் உதவியின் கீழ்
கணவனை இழந்த பெண்களுக்கான
கடன் வழங்கல் வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெண்தலைவிகளை கௌரவித்தல்



விழாவின் அதிதி மங்கள விளக்கேற்றல்



திருக்கோவிலில் நடைபெற்ற மகளிர்தின விழாவின் ஊர்வலம்



எமது அமைப்பினால் கல்முனையில் நடைபெற்ற திருமணப் பதிவு

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்முனையில் நடைபெற்ற மகளிர் தின ஊர்வலம்



1998ல் கரைதீவில் நடைபெற்ற மகளிர்தின ஊர்வலம்



அதிதிகள் வருகை



மகளிர்தின விழாவின் பிரதம அதிதி பெண் கல்வி ஊக்குவிப்புக்கு பரிசு வழங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1998ல் நடைபெற்ற மகளிர்தின விழாவில் வூஸ்க் உதவி இணைப்பாளர் கண்காட்சியை திறந்து வைத்தமை



1990ல் சர்வதேச மகளிர் தின விழா கலை நிகழ்ச்சி



"பெண்களும் அபிவிருத்தியும்" எனும் பயிற்சி பட்டறையின் பயிற்சியாளர்கள்



அரச, சார்பற்ற நிறுவனங்களின் தலைவிகளைக் கௌரவித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பெண்களும் சட்டமும்" பயிற்சி வழங்கள்



"பெண்களும் அபிவிருத்தியும்" பயிற்சி வழங்கல்



"பெண்களும் தலைமைத்துவமும்" பயிற்சி வழங்கல்



"பெண்கள் மீதான வன்முறை" பயிற்சி வழங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை

அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் இந்த வருடம் நடைபெறும் மகளிர் தின விழாவிற்கும், மலர் வெளியீட்டிற்கும்

நிதி உதவிய நெதர்லாந்து தூதரகத்திற்கும்,

எப்போதும் அனுசரணையோடு உதவிக் கொண்டுவரும் CIDA நிறுவனத்திற்கும்,

போட்டி நிகழ்ச்சிகளுக்கு பாடசாலை அனுமதியை வழங்கிய வலயக் கல்வி அலுவலகத்தினருக்கும், அதிபர்கள், ஆசிரியர் கள், மாணவர்களுக்கும் நடுவர்களுக்கும்,

எமது மலர் வெளியீட்டுக்கு தங்களது சிரமம் பாராது வாழ்த்துச் செய்தி, கவிதை, கட்டுரை அனுப்பிவைத்தோருக்கும், மலர் வெளியீட்டிற்கு உதவியவர்களுக்கும்,

எமது நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கு உதவிய அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு இணைப்பாளர் அவர்களுக்கும், ஊழியர்களுக்கும்,

இவ்விழாவிற்கு சகல வழிகளிலும் உதவி வழங்கிய அனைவருக்கும், பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் என் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு

*இவ்வண்ணம்*
*திருமதி. கே. தில்லையம்மா*
*செயலாளர்,*
*பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலக்ஷன் அச்சகம்,
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org